අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

# 2020

# වාර්ෂික වාර්තාව
# ஆண்டறிக்கை
# Annual Report


රජයේ මුද්‍රණ නීතිගත සංස්ථාව
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
State Printing Corporation

ஆண்டறிக்கை,
கணக்குக் கூற்றுக்கள் மற்றும்
கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை

# அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

# 2020

# ஆண்டறிக்கை

2020 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த 53 வது ஆண்டுக்கானது.
2020 ஜனவரி மாதம் 01 ஆம் திகதியிலிருந்து
2020 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை

## நிறுவனத்தின் நோக்கு

அச்சுத் தொழிலில் முன்னோடியாக திகழ்வதன் மூலம் வெளியீட்டில் அதிலும் குறிப்பாக கல்வி அபிவிருத்தி வெளியீட்டை ஊக்குவித்து பாதுகாப்பதுடன் அப்பியாச புத்தக மற்றும் காகிதம் உட்பட எழுதுவதற்கு தேவையான பொருள்களின் விற்பனை மற்றும் சந்தை ஆகியவற்றில் முன்னோடியாக திகழுதல்.

## பணி

திறமையும் தைரியமும் மிக்க மனநிறைவு கொண்ட ஊழியர்களைக் கொண்ட முன் உதாரணமான அரச கூட்டுத்தாபனமாக திகழ்வதுடன் அச்சுத் தொழிலில் அதி உயர் தரத்திற்கு ஏற்ப போட்டியான விலைக்கு அச்சுப் பொருள் உற்பத்திகளை மக்களின் தேவை மற்றும் நலம் கருதி விநியோகித்தல்.

பானலுவ,
பாதுக்க.

கௌரவ கல்வி அமைச்சர்,
கல்வி அமைச்சு,
இசுருபாய
பத்தரமுல்ல

கௌரவ அமைச்சர்,

நிதிச் சட்டம் இலக்கம் 38, 1971, 14 வது பிரிவின்படி, 1, ஜனவரி இலிருந்து 31.12.2020 வரைக்குமான ஆண்டு தொடர்பாக பின்வருவனவற்றை பணிப்பாளர் சபையின் சார்பில் உங்களிடம் சமர்ப்பிக்கிறேன்.

1. அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் பற்றிய வருடாந்த அறிக்கை.
2. கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகை, செயலாற்று கணக்குகள் மற்றும் இலாப, நட்ட கணக்கு.
3. கணக்காய்வாளர் நாயகத்தின் கருத்துரைகள்.

தங்களின் கவனத்திற்காக முன்வைக்கின்றேன்.

தங்கள் விசுவாசமுள்ள,

**ஜே. எம். யூ. பீ. ஜயசேகர**
தலைவர்
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்



# தலைவரின் செய்தி

**1968-09-04 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட அரச அச்சகக் கூட்டுத்தாபனம் இப்போதைக்கு தமது 54 ஆவது வெற்றிப் படியை கடந்துள்ள சந்தர்ப்பத்தில் அதன் புதிய தலைவராக செய்தியொன்றை வெளியிடுவதற்கு கிடைத்தது எனது வாழ்க்கையில் கிடைத்த பாக்கியமொன்றாக கருதுகின்றேன்.**

பாடசாலை பாடப்புத்தகங்களை நாட்டின் பிள்ளைகளுக்கு பெற்றுக் கொடுக்கும் நோக்கத்தை முற்படுத்தி 1968 இன் 24 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட அரச அச்சகக் கூட்டுத்தாபனம், பாடப்புத்தகங்களுக்கு மேலதிகமாக SPC வியாபாரப் பெயரின் கீழ் பயிற்சிப் புத்தகங்களும் அச்சிடப்பட்டு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

அப்போதைய கல்வி அமைச்சர், தற்போதைய பிரதமர் கௌரவ தினேஷ் குணவர்தன அவர்களின் வேண்டுகோளின் படி நான் 2022 பெப்ரவரி 19 ஆம் திகதி இந்த கூட்டுத்தாபனத்தின் தலைவர் பதவியைப் பொறுப்பெடுத்தேன்.

கல்வி அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற அரச அச்சகக் கூட்டுத்தாபனம், கடந்தகாலங்களில் நாட்டில் நிலவிய அரசியல் இஸ்திரதன்மையற்ற நிலைமை மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சவாலுக்குரிய பலபிரச்சினைகளுக்கு முகங்கொடுத்ததுடன், அதில் பிரதான சவாலாக நாட்டில் நிலவிய டொலர் நெருக்கடியினால் 45மூலமான பாடசாலைப் புத்தகங்களின் அச்சு மற்றும் அப்பியாசப் புத்தகங்கள் உட்பட ஏனைய அச்சு நடவடிக்கைகளுக்காக தேவையான கடதாசிகளை கொள்வனவு செய்யமுடியாமையாகும். இருப்பினும் மேதகு சனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் மற்றும் கல்வி அமைச்சர் பேராசிரியர் கௌரவ சுசில் பிரேமஜயந்த் அவர்களிடம் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் இந்தியகடன் உதவித் திட்டத்தின் ஊடாக கடதாசி பெற்றுக்கொள்ளும் வேலைத்திட்டம் இப்போது வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டுவருவதுடன் இதற்காக கல்வி அமைச்சின் செயலாளர் திரு எம். என். ரணசிங்க அவர்களும் பெரியதொரு தியாகத்தை மேற்கொண்டிருந்தார். பாடசாலை பாடப்புத்தகங்களின் அச்சிடலுக்காக இந்தியக்கடன் உதவித்திட்டத்தின் கீழ் அமெரிக்க டொலர் 20 மில்லியனையும் மற்றும் அப்பியாசப்புத்தகங்களின் அச்சிடலுக்காக அந்த உதவித்திட்டத்தின் கீழ் அமெரிக்கடொலர் 1.5 மில்லியனையும் ஒதுக்குவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அது எனக்கு கிடைத்த வெற்றியொன்றாக கருதுகின்றேன். பாடப்புத்தகங்கள் அச்சிடலுக்காக தேவையான கடதாசி 8791 மெட்ரிக் தொன்னும், அச்சிடலுக்கு தேவையான ஏனைய பொருட்களின் இறக்குமதிக்காக ரூபா 5745 மில்லியனும் கல்வி அமைச்சின் செலவு ஏற்பாட்டிற்காக ஒதுக்கிக் கொள்வதற்கு மற்றும் அதன் பிரகாரம் அந்தப் பொருட்களின் இறக்குமதிக்காக பெறுகை நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நிலவுகின்ற கடதாசிப் பற்றாக்குறை லொத்தர் அச்சிடுதலிலும் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதுடன் அடிக்கடி உற்பத்தி குறைவதனால் ஏற்படுத்திய தாமதத்தை நிறைவுசெய்யும் வகையில் தேசிய கடதாசி கம்பனியுடன் 2022.09.01 ஆம் திகதி ஒப்பந்தமொன்றை மேற்கொண்டு லொத்தர் அச்சிடலுக்கான தேவையான கடதாசியை தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்வதற்கு தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்தோடு கல்வி அமைச்சின் செலவுத் தலைப்பின் கீழ் ரூபா 203 மில்லியன் செலவில் ஜப்பான் அரசிடமிருந்து Kumori அச்சு இயந்திரம் இந்த வருடத்திலே கொள்வனவு செய்யப்பட்டதுடன், அதனூடாக பாடப்புத்தகங்கள் மற்றும் வியாபார அச்சு நடவடிக்கைகளை தரமானதாகவும் மிகவும் உயரந்த நிறைவாக பெற்றுக் கொடுப்பதற்கு எங்களுக்கு வல்லமை கிடைத்துள்ளது. அதனை அச்சிடுதலின் புதிய திருப்புமுனையாக நான் காண்கின்றேன்.

அத்தோடு அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட “வகாசங்கிராமய” வேலைத்திட்டத்தின் பிரகாரம் கல்வி அமைச்சரின் வழிகாட்டலின் கீழ் எமது கூட்டுத்தாபனத்தில் உள்ள ஏக்கர் அளவிலான வெற்றுக் காணிகளின் அடர்ந்த காட்டை தூய்மைப்படுத்தி பயிர் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அனைத்து ஊழியர்களினதும் உழைப்பினால் கூட்டுத்தாபன பூமி தற்போது நல்லவிளைச்சலுள்ள பண்ணையொன்றாக நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பலனையும் தற்போது அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

அனைத்து அச்சிடல் நடவடிக்கைகளினாலும் இந்த நிறுவனத்திற்கு கிடைக்கின்ற கீர்த்தியை சிறிதொன்றாக கருதாமல் அதைமேலும் விருத்தி செய்து ஊழியர் நலன்களுக்காக தியாகத்துடன், முறையான நிதித் திட்டமிடலின் ஊடாக முன்னோக்கி வருகின்ற வருடங்களில் கூட்டுத்தாபனத்திற்கு நிதியிலான சக்தியொன்றை பெற்றுக்கொடுப்பது எனது ஒரே எதிர்ப்பார்ப்பாக காணப்படுவதுடன் இதற்காக அனைத்து ஊழியர்களுடன் ஒன்றிணைந்து மோசடிகளை ஒழித்து கூட்டுத்தாபனத்தை முன்னோக்கி கொண்டு வருதலே எனது எதிர்ப்பார்ப்பாகும்.

இந்த வருடாந்த அறிக்கையை தயாரிக்கும்போது அதற்கு ஒத்துழைப்பு வழங்கிய பணிப்பாளர் சபை, பொதுமுகாமையாளர் உட்பட உத்தியோகத்தர் சபைக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஜே. எம். யூ. பீ. ஜயசேகர**
*(BSC Mgt, FCA , FCMA , FPFA , FMAAT)*
தலைவர்
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
2022.10.17

# 2020
# பணிப்பாளர் சபை

**தலைவர்**

திரு. ஜனக ரத்னகுமார

**பணிப்பாளர்கள்**

1. திரு. விஜித நன்தகுமார
2. திரு. ஈ. ஜீ. எச். எம். ரனசிங்க
3. திரு. எச். எல். டபிளியூ. காமிணீ
4. திரு. டீ. எச். கண்டம்பி
5. திரு. எச். டீ. எல். சாமிகர
6. திரு. யூ. ஜீ. எஸ். ரங்கஜீவ

# 2020
# நிறைவேற்று அதிகாரிகள்

**நிதி முகாமையாளர்**
திரு. எம். ஆர். பீ. ஜயவர்தன

**விநியோக முகாமையாளர்**
திரு. ஈ. வீ. கே. கீர்த்திரத்ன

**பிரதி முகாமையாளர்**
திரு. டீ. எம். ஆர். என். தென்னகோன்

**பிரதி வேலை முகாமையாளர்**
திரு. எஸ். டீ. குமாரசிங்க

**முகாமையாளர் (காகிதாதிகள் தொழிற்சாலை)**
திரு. எல். டீ. பிரேமசிறி

**கணக்காளர்**
திரு. எம். ஆர். பீ. ஜயவர்தன

**உள்ளக கணக்காய்வாளர்**
திரு. எம். எஸ். எஸ். மொஹொட்டி

**உதவி வேலை முகாமையாளர் (மதிப்பீடு)**
திரு. கே. டீ. டீ. சந்திரசிறி

**உதவி வேலை முகாமையாளர் (பாதுகாப்பு அச்சிடல் பிரிவு)**
திரு. எம். ஏ. கொதலாவல

**உதவி வேலை முகாமையாளர் (புத்தகம் கட்டுதல்)**
திரு. பீ. கே. திலக் மஹிந்த

**உதவி முகாமையாளர் (விற்பனை)**
திரு. எச். ஆர். குணசேகர

**உதவி முகாமையாளர் (தகவல் தொழிநுட்ப)**
ஆர். எம். ஏ. பீ. பீ. ராஜகருணா

**உதவி முகாமையாளர் (நிர்வாக, மனித வளங்கள் அபிவிருத்தி)**
திருமதி என். வீ. என். ஆர். ஆசிங்சனீ

**உதவி முகாமையாளர் (சட்டம் பணிப்பாளர் சபையின் செயலாளர்)**
திரு. ஏ. எல். ஆர். மதுகாணி

**உதவி முகாமையாளர் (வெளியீடு)**
திரு. மதுரங்க சீ. நுவன்ப்பிரிய

**உதவி முகாமையாளர் (வழங்கல்)**
திரு. யூ. அனில் ஜயகாந்த

**கணக்காளர்**
திரு. டப். ஏ. ஏ. எஸ். ஜயசுன்தர

**உதவி வேலை முகாமையாளர் (பராமரிப்பு)**
திரு. என். ஜீ. எல். சன்திமால்

**கணக்காளர்**
திரு. என். யூ. எஸ். டி ஸில்வா

# 2020
## பணிப்பாளர் சபையின் அறிக்கை

நிதிச் சட்டம் இலக்கம் 38, 1971, 14 வது பிரிவுன்படி, அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை 31. 12. 2020 இல் முடிவடைந்த ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை உள்ளடக்கிய 52 ஆவது அறிக்கையை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறது.

மதிப்பீட்டு ஆண்டில் 06 சபைக்கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

---

## 01. உற்பத்தி
### 1.1 பாடசாலை பாட நூல்கள்
### 1.1.1 பாடசாலை நூல்களை அச்சிடுதல்

பாடசாலைப் பாடப்புத்தகங்களை அச்சிடும் நோக்கில் நிறுவப்பட்ட கூட்டுத்தாபனம் திறந்த பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்டதையடுத்து வேறு உற்பத்திப் பிரிவுகளை நோக்கி விரிவடைந்துள்ளது. அத்துடன் பாடசாலைப் பாடப்புத்தகங்கள் அச்சிடும் பணி நேரடியாக கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைப்பதற்கு பதிலாக கேள்விப் பத்திரங்கள் ஊடாகப் போட்டி அடிப்படையில் கல்வி வெளியீட்டுத்திணைக்களத்தின் கட்டளைகளைக் கூட்டுத்தாபனம் பெற்றுக்கொள்ள வேண்டியேற்பட்டது. எனினும் இம்முறைமை மாற்றப்பட்டு 2020 ஆண்டிலும் கேள்விப் பத்திர நடைமுறைக்கு புறம்பாக பாடப்புத்தகங்கள் அச்சிடும் பணி கூட்டுத்தாபனத்திற்கு அளிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தது. இதற்கு அமைவாக 2020 ஆண்டிலும் 15.91 மில்லியன் பாடசாலைப் பாடப்புத்தங்களின் பிரதிகளை அச்சிட்டதன் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு 1297.850 மில்லியன் ரூபா வருமானம் கிடைத்தது.




பகுப்பாய்வு ஆண்டில் அச்சிடப்பட்ட பாடசாலை பாடப்புத்தகங்களின் பிரதிகளின் எண்ணிக்கை மற்றும் அதன் மூலம் கிடைத்த வருமானம் 2018 மற்றும் 2019 க்கு ஒப்பீட்டு அடிப்படையில் பின்வருமாறு

| பாடசாலை அச்சு வேலை | 2018 ('000) | 2019 ('000) | 2020 ('000) |
|---|---|---|---|
| பிரதிகள் தொகை | 4,485 | 11,012 | 15,910 |
| வருமானம் - ரூபா | 428,627 | 1,090,416 | 1,297,850 |




### 1.2 ஏனைய அச்சு சேவைகள்


பகுப்பாய்வு ஆண்டில் அறநெறி பாடசாலை பாடப்புத்தகங்கள் அச்சிடல் சேவைகள் (அதிஷ்ட இலாபச்சீட்டுகள், ரிதிரேகா, வங்கி சேமிப்பு சான்றிதழ் பத்திரங்கள், தபால் வைப்பு புத்தங்கள், லேபல்கள், எயார்போர்ட் சுப்பர் டிரோ முதலியன) மற்றும் அரச நிறுவனங்களுக்கான அச்சிடல் சேவைகள் வழங்கப்பட்டன. இதனைத் தவிர வெவ்வேறு நிறுவனங்களின் அச்சுப் பணிகளும் நிறைவேற்றப்பட்டன. விஷேட அச்சிடல் சேவைகள் சில கீழ்வருமாறு.

### 1.2.1 பாதுகாப்பு அச்சிடும் பணி

தேசிய லொத்தர் சபை மஹஜன சம்பத இற்றைவரை 45 ஆண்டுகள் அச்சிடப்பட்டுள்ளது. இதனைத் தவிர எயார்போர்ட் லொத்தரும் அச்சிடப்பட்டுள்ளது. லொத்தர் சபையிடமிருந்து கிடைத்த சகல அச்சிடல் கட்டளைகளும் அச்சிடப்பட்டதுடன், 2020 ஆண்டில் அச்சிடப்பட்ட லொத்தர்களின் எண்ணிக்கை 534,727 மில்லியனாகும். இதற்கு அமைவாக வருமானம் 299,447 மில்லியன் ரூபாவாகும். லொத்தர் அச்சிடலின் வருமானமும் பிரதிகளின் எண்ணிக்கையும் பின்வருமாறு.


| லொத்தர் அச்சிடுதல் வேலை | 2018 ('000) | 2019 ('000) | 2020 ('000) |
|---|---|---|---|
| பிரதிகள் தொகை | 427,415 | 524,474 | 534,727 |
| வருமானம் - ரூபா | 248,011 | 293,440 | 299,447 |

லொத்தர் அச்சிடுதல்




லொத்தர் சீட்டுக்களின் தொகை

லொத்தர் அச்சிடுதல்




லொத்தர் அச்சிடுதலில் இருந்து கிடைத்த வருமானம்

### 1.2.2 வேறு அச்சு சேவைகள்

அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களை போன்று தனியார்துறையின் கட்டளைகளை பெற்றுக்கொள்வது குறித்து விசேட ஆர்வத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. நிறைவேற்றப்பட்ட விசேட அச்சிடல் சேவைகளில் பின்வரும் சேவைகள் முக்கியமானவையாக காணப்பட்டன.

01. பல நிறுவனங்களுக்கான ஆண்டறிக்கைகள்
02. அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்கான பல்வகை அச்சுப் பணிகள்
03. பல்கலைக்கழக சான்றிதழ் பத்திரங்கள்
04. தேசிய மிருககாட்சிசாலைக்கான நுழைவுச் சீட்டுக்கள் மற்றும் ஏனைய விளம்பர கையேடுகள்
05. சினிமா டிக்கட்டுக்கள்
06. ஊழியர் சேமலாப நிதியத்தின் பல்வகை அச்சுப் பணிகள்
07. தேசிய சேமிப்பு வங்கியின் அச்சுப் பணிகள்
08. பரீட்சைத் திணைக்களத்திற்காக அச்சிடப்பட்ட விடை எழுதும் தாள் புத்தங்கள்


பல்வகை அச்சுப் பணிகளை நிறைவேற்றி கூட்டுத்தாபனம் ஈட்டிய வருமானம் ரூ. 70 மில்லியனாகும்.

## 1.3 அப்பியாசக் கொப்பிகளையும் ஏனைய காகிதாதிகளையும் தயாரித்தல்

பகுப்பாய்வு ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019 ஆண்டின் உற்பத்தி பின்வருமாறு.

| விபரம் | உற்பத்தி அளவு | பெறுமதி ரூபா |
|---|---|---|
| அப்பியாசக் கொப்பிகள் (80 பக்கம்) | மில்லியன் 4.449 | மில்லியன் 113.685 |
| CR கொப்பிகள் | மில்லியன் 0.845 | மில்லியன் 52.208 |
| ஏனைய காகிதாதிகள் | மில்லியன் 0.059 | மில்லியன் 6.134 |
| மொத்தம் | மில்லியன் 5.354 | மில்லியன் 172.026 |

அப்பியாசக் கொப்பிகளும் ஏனைய காகிதாதிகளும்




பிரதிகள் தொகை

மதிப்பீட்டு ஆண்டில் உற்பத்தியும் 2018, 2019 ஆம் ஆண்டுகளுக்கான ஒப்பீட்டு புள்ளி விபரங்கள்

| அப்பியாசக் கொப்பிகளும் ஏனைய காகிதாதியும் | 2018 ரூ. ('000) | 2019 ரூ. ('000) | 2020 ரூ. ('000) |
|---|---|---|---|
| பிரதிகள் தொகை | 7,220 | 5,766 | 5,354 |
| வருமானம் - ரூபா | 238,333 | 187,035 | 172,026 |

அப்பியாசக் கொப்பிகளும் ஏனைய காகிதாதிகளும்



பாடப்புத்தகங்கள், ஏனைய அப்பியாச புத்தகங்களிலிருந்து கிடைத்த வருமானம்


13.03.2020 தொடக்கம் 31.05.2020 வளரயான (80 நாள்) கொவிட் 19 தொற்று நோய் காரணமாக உற்பத்தி மந்த நிலை மற்றும் 01.06.2020 தொடக்கம் 25.07.2020 வரையாள (54 நாள்) கால கட்டத்தில் எழுதும் கடதாசி கிடைக்கப் பொறாளமயிளால் 2020 ஆம் வருடத்தில் எதிர்பார்க்கப்பட்ட இலக்ளை அடைய முடியவில்லை.
2020 ஆம் வருடத்தில் உற்பத்தி இலக்கு:
6.64 மில்லியன் (பெறுமதி ரூ. 234 மில்லியன்)

## 02. விற்பனை/சந்தைப்படுத்தல்

2018ஆண்டில் மொத்த சந்தைப்படுத்தல் வருமானம் சிறியளவில் குறைவடைந்தது.

| வருடம் | 2018 ரூபா | 2019 ரூபா | 2020 ரூபா |
|---|---|---|---|
| மொத்த வருமானம் (வரி உட்பட) | 282,021,852.00 | 153,082,388.79 | 149,717,779.84 |

விற்பனை சந்தைப்படுத்தல்



மொத்த விற்பனை பெறுமதி

2018 ஆண்டுடன் ஒப்பிடும் போது 2019 ஆண்டில் அப்பியாசக் கொப்பிகள் வருமானத்தின் குறையும் சதவீதம் 2019 ஆண்டின் குறைவடையும் சதவீதமான 45.71% அளவு 2020 ஆண்டில் 2.19% வரை வீழ்ச்சியடைந்துள்ளது. வருமானம் குறைவடைவதற்கு நாட்டில் பரவிய கொவிட் 19 நிலமை காரணமாக மாகாணங்களுக்குடையிலான பயணக் கட்டுப்பாடு மற்றும் 2020 ஆண்டில் புத்தக உற்பத்திக்கு தேவையான மூலப்பொருள் விநியோக பற்றாக்குறையால் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது.
அதனைத் தவிர வெளி நிறுவனங்கள் ஊடாக கொள்வனவு செய்து மீண்டும் விற்பனை செய்வதற்கு பயன்படுத்தப்படும் எழுதுபொருட்களை 2020 ஆண்டில் எதிர்ப்பார்த்தவாறு பெற்றுக்கொள்ள முடியாமையினால் எதிர்ப்பார்த்த வருமானம் குறைவடைந்தது.

கூட்டுத்தாபனம் மற்றும் வெளிப்புற எழுதுபொருட்கள் எதிர்ப்பார்த்தவாறு நிறைவு செய்ய முடிந்திருந்தால் இவ்வாண்டில் வருமானத்தை மேலும் 15% இடையிலான அளவில் அதிகரிக்க முடிந்திருக்கும்.

### வெளியீட்டுச் சேவை

2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2020 ஆம் ஆண்டு வெளியீட்டு இலாபம் குறைவாக காணப்பட்டது. முன் ஆண்டில் வேறு வெளியீடுகளை வெளியிட முன்னுரிமை வழங்கப்பட்டதோடு கணிப்பீட்டு ஆண்டின் அதில் பின் தங்கிய நிலையிருந்தது. இந்த ஆண்டில் கூட்டுத்தாபனம் 02 வெளியீடுகளை மாத்திரம் வெளியீட்டது.

| | |
|---|---|
| 2020 வெளியிடப்பட்ட புதிய நூல்களின் எண்ணிக்கை | 02 |
| 2018 ஆண்டின் வெளியீட்டு வருமானம் | மில்லியன் 5.2 |
| 2019 ஆண்டின் வெளியீட்டு வருமானம் | மில்லியன் 2.3 |
| 2020 ஆண்டின் வெளியீட்டு வருமானம் | மில்லியன் 5.8 |

## 03. நிலையான சொத்துக்கள்

2020 ஆண்டின் இறுதியில் கூட்டுத்தாபனத்தின் நிலையான வைப்புக்களின் மொத்த கிரயம் ரூ.1,176,497,289/-. அதன் தேறிய பெறுமதி ரூ.945,054,250/- ஆகும். இந்நிலைமை இதற்கு முந்திய வருடமான 2019 ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே ரூ.1,168,708,786/- மற்றும் ரூ.991,125,221/- ஆக காணப்பட்டது.

| நிலையான சொத்துக்கள் | 2018 ரூ.('000) | 2019 ரூ.('000) | 2020 ரூ.('000) |
|---|---|---|---|
| திறந்த பெறுமதி (செலவினத்தில்) | 1,148,393 | 1,168,709 | 1,176,497 |
| வருட முடிவில் சரியான பெறுமதி | 1,039,094 | 991,125 | 945,054 |

## 04. வரி பொறுப்பு


கூட்டுத்தாபன மதிப்பீட்டு ஆண்டுக்கான 2019/2020 வருமான வரி, பங்கிலாப வரியாக ஏதேனுமொரு தொகை கூட்டுத்தாபனத்தின் 2019 ஆண்டிறுதி கணக்குகளுக்கு ஏற்ப ஏற்பாடு செய்யப்படவில்லை.
(கூட்டுத்தாபனம் நட்ட நிலைமை தொடர்ந்நன் காரணமாக)

| வரி பொறுப்பு | 2018 ரூ. ('000) | 2019 ரூ.('000) | 2020 ரூ.('000) |
|---|---|---|---|
| வருமான வரி | - | - | - |
| பங்கிலாப வரி | - | - | - |
| **மொத்தம்** | - | - | - |

## 05. இலாபம்

2020 ஆண்டில் கூட்டுத்தாபனம் ரூ. 22,914,300/- வரிக்கு முந்திய இலாபத்தை ஈட்டியுள்ளதுடன், 2019 ஆண்டில் ரூ. 169,428,397/- நட்டமடைந்தது.


| இலாபம் | 2018 ரூ.('000) | 2019 ரூ.('000) | 2020 ரூ.('000) |
|---|---|---|---|
| வரிக்கு முந்திய இலாபம் | (406,985) | (169,428) | 22,914 |
| வரி செலுத்திய பின்னர் | (406,985) | (169,428) | 22,914 |



## 06. போனஸ்

2016 ஆண்டு தொடக்கம் கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக நட்டம் அடைத்து வந்துள்ளதுடன் 2020 வருடத்துக்கான போனஸ் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு கொடுக்கப்படவில்லை. அதற்கு பதிலாக 2021 வருடம் ஊழியர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஊழியர்களை ஊக்குவிப்பதற்காக மீதி விடுமுறையை கருத்திற் கொண்டு விசேட ஊக்குவிப்பு கொடுப்பனவொன்றை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

| போனஸ் | 2018 ரூ. ('000) | 2019 ரூ. ('000) | 2020 ரூ. ('000) |
|---|---|---|---|
| | 1,408 | 22,097 | - |




## 07. சேமநலன்

பின்வரும் நலன்புரிச் சேவைகள் மற்றும் வசதிகள் கடந்த ஆண்டு அடிப்படையில் இவ்வாண்டிலும் செலுத்தப்பட்டது. இதற்காக கூட்டுத்தாபனம் செலவிட்ட மொத்த தொகை ரூ. 42 மில்லியனாகும்.

| | சேமநலன் | 2018 ரூ.('000) | 2019 ரூ.('000) | 2020 ரூ.('000) |
|---|---|---|---|---|
| 01. | ஊழியர்களுக்கான போக்குவரத்து வசதிகள் | 10,879 | 8,503 | 6,962 |
| 02. | ஊழியர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு | 5,263 | 4,784 | 4,815 |
| 03. | மருத்துவ வசதிகள் | 10,046 | 9,431 | 8,158 |
| 04. | பல்வேறு சேமநல வசதிகள் | 24,204 | 21,171 | 18,936 |
| 05. | ஊழியர் இழப்பீட்டு காப்புறுதி | - | - | - |
| 06. | சகல ஊழியர்களுக்கும் காகிதாதிகளுக்கான கொடை வவுச்சர்கள் | 1,703 | 1,378 | 1,447 |
| 07. | ஊழியர்களுக்கான போனஸ் | 1,408 | 22,097 | - |
| 08. | ஊழியர்களின் வீடமைப்பு கடன் வட்டியை மீளளித்தல் | 2,573 | 2,087 | 1,773 |
| 09. | பயன்படுத்தப்படாத விடுமுறைகளுக்கான கொடுப்பனவு | 13,615 | 13,210 | - |
| 10. | விசேட கொடுப்பனவு | - | 15,675 | - |
| | **மொத்தம்** | **69,748** | **98,336** | **42,091** |

## 08. ஆளணி

2020.12.31 ஆம் திகதியில் கூட்டுத்தாபனத்தின் ஊழியர் எண்ணிக்கை 584 ஆகும்.

| **ஊழியர் எண்ணிக்கை** | **2020** |
|---|---|
| அலுவலகம் | 129 |
| பிரதான தொழிற்சாலை | 313 |
| காகிதாதி தொழிற்சாலை | 57 |
| பாதுகாப்பு பிரிவு | 48 |
| விற்பனை நிலையங்கள் | 37 |
| **மொத்த ஊழியர் தொகை** | **584** |

**2020 ம் ஆண்டில் சேவைக்கு உள்வாங்கப்பட்ட உத்தியோகத்தர்கள்**

| | **பெயர் / பதவி** | **திகதி** |
|---|---|---|
| 1. | திருமதி என். வீ. கே. ஆசிங்சனீ<br>– உதவி முகாமையாளர்<br>(நிர்வாக, மனித வளங்கள் அபிவிருத்தி) | 2020.07.01 |
| 2. | ஆர். எம். ஏ. பீ. பீ. ராஜகருணா<br>– உதவி முகாமையாளர் (தகவல் தொழிநுட்ப) | 2020.10.20 |

**2020 ஆண்டில் சேவையில் இருந்து விலகிய நிறைவேற்று அதிகாரிகள்**

| | **பெயர் / பதவி** | **திகதி** |
|---|---|---|
| 1. | திரு. எம். டீ. ஜே. பெரேரா<br>– சந்தைப்படுத்தல் முகாமையாளர் | 2020.08.25 |
| 2. | திரு. டப். டப். எம். ஆரச்சிகே<br>– உதவி முகாமையாளர் (பாதுகாப்பு) | 2020.09.22 |
| 3. | திரு. எஸ். டீ. கருணாரத்ன<br>– பொது முகாமையாளர் | 2020.12.19 |

## முடிவு

கூட்டுத்தாபனத்தின் சகல ஊழியர்களும் கூட்டுத்தாபனத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு மனப்பூர்வமான ஒத்துழைப்பை தந்தமைக்காக தலைவரும், பணிப்பாளர்களும் நன்றி கூறுகிறார்கள்.

வெற்றிகரமான திட்டத்திற்கு வழிகாட்டுதலும் ஆதரவும் அளித்த கௌரவ கல்வி அமைச்சருக்கும் திட்டத்தை அமுல் செய்வதில் தொடர்ச்சியான ஆதரவை தந்த அமைச்சின் செயலாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் தலைவரும், பணிப்பாளர்களும் நன்றி கூறுகின்றார்கள்.

எதிர்வரும் ஆண்டுகளில் இதே ஒத்துழைப்பு வழங்கப்படுமென்று முகாமைத்துவம் நம்புகிறது.

**ஜே. எம். யூ. பீ. ஜயசேகர**
தலைவர்

## 2020ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான விரிவான வருமானக் கூற்றுக்கள்

| | குறிப்புக்கள் | 2020 ரூ. | 2019 ரூ. |
|---|---|---|---|
| வருமானம் | 7 | 1,843,090,170 | 1,593,815,189 |
| விற்பனை செலவு | 8 | (1,494,208,079) | (1,320,149,485) |
| மொத்த இலாபம் | | **348,882,091** | **273,665,704** |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | 9 | 20,240,846 | 20,065,417 |
| விநியோக செலவினம் | 10 | (21,775,010) | (39,039,429) |
| நிர்வாக செலவினம் | 11 | (170,176,441) | (184,930,860) |
| ஏனைய செயற்பாட்டு செலவினம் | 12 | (35,876,369) | (92,281,928) |
| செயற்பாட்டு இலாபம் | | 141,295,116 | (22,521,097) |
| நிதி வருமானம் | | 1,977,815 | 2,256,626 |
| நிதி செலவினம் | 13 | (120,358,632) | (149,163,926) |
| வரிக்கு முந்திய இலாபம் | | **22,914,300** | **(169,428,397)** |
| வருமான வரி | 14 | - | - |
| Deffered Tax | 21 | - | - |
| வரிக்கு பிந்திய இலாபம் | | **22,914,300** | **(169,428,397)** |

## 2019ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்றுக்கள்

| | 2020 ரூ. | 2019 ரூ. |
|---|---|---|
| ஆண்டுக்குரிய இலாபம் (வரிக்கு பின்) | **22,914,300** | **(169,428,397)** |
| ஏனைய விரிவான வருமானம் | - | - |
| மறு மதிப்பீட்டு இலாபம் | - | - |
| ஆண்டுக்குரிய மொத்த விரிவான வருமானம் | **22,914,300** | **(169,428,397)** |

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

## 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில்
## உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

| | குறிப்பு | 2020<br>ரூ. | 2019<br>ரூ. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | | |
| சொத்து, பொறி மற்றும் உபகரணங்கள் | 15 | 945,054,250 | 991,125,221 |
| வேறுபட்ட வரி பொறுப்புக்கள் | 21 | - | 17,105,398 |
| | | **945,054,250** | **1,008,230,619** |
| **நடைமுறைச் சொத்துக்கள்:** | | | |
| பொருட்பட்டியல்கள் | 16 | 306,106,350 | 275,133,678 |
| வியாபார வருமதிகள் | 17 | 613,179,690 | 393,268,112 |
| ஏனைய வருமதிகள் | 18 | 28,826,335 | 28,942,689 |
| முற்பண கொடுப்பனவு | | 255,645 | 386,775 |
| காசும் காசுக்கு சமமானவையும் | 19 | 36,135,080 | 31,459,352 |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | | 984,503,100 | 729,190,607 |
| **மொத்த சொத்துக்கள்** | | **1,929,557,350** | **1,737,421,226** |
| **ஒப்புரவுகளும் பொறுப்புக்களும்** | | | |
| வெளியிடப்பட்ட மூலதனம் | | 15,000,000 | 15,000,000 |
| ஒதுக்கங்கள் | | - | 15,003,633 |
| இருப்பு வருமானங்கள் | | (582,917,657) | (648,559,110) |
| மொத்த ஒப்புரவுகள் | | 808,011,707 | 808,011,707 |
| **மொத்த ......** | | **240,094,050** | **189,456,230** |
| **நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்** | | | |
| வங்கி கடன் - கடன் தவனை | 20 | 92,917,055 | 136,642,139 |
| ஓய்வு பயன் பொறுப்புறுதிகள் | | 174,793,353 | 191,707,011 |
| மொத்த - நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் | | **267,710,408** | **328,349,150** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வியாபார சென்மதிகள் | 22 | 328,246,396 | 240,546,047 |
| ஏனைய சென்மதிகள் | 23 | 39,804,411 | 71,885,027 |
| குறுகிய கால கடன் பெறுவனவுகளுக்கான வட்டி | 24 | 985,463,449 | 840,717,598 |
| பயன்பாட்டுக் கடனின் கீழ் கொள்முதல் | | 24,326,804 | 46,765,102 |
| வங்கி மேலதிகப் பற்று | | 43,911,832 | 19,702,073 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **1,421,752,892** | **1,219,615,846** |
| **மொத்த ஒப்பரவுகளும் பொறுப்புக்களும்** | | **1,929,557,350** | **1,737,421,226** |

இந்நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் தேவைகளுக்கு இணைவாக உள்ளதென இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

.......................................

ஜு. எம். டீ. எச். எஸ். கம்லத்
நிதி முகாமையாளர்

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பில் பணிப்பாளர் சபை பொறுப்பேற்க வேண்டும். இந்நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கைச்சாத்திடப்பட்டுள்ளன. பக்கம் 53, 54, 55 ஆகியவற்றிலுள்ள நிதிக் கொள்கைகள், பக்கம் 57, 58 மற்றும் 62 தொடக்கம் 64 வரையிலான படிவங்கள் நிதிக்கூற்றுக்களுடன் ஒருங்கிணைந்த பகுதியாக காட்டப்பட்டுள்ளன.

..................................................

**பீ. பீ. எச். ஜே. ஏ. ரத்னகுமார**
**தவிசாளர்/பணிப்பாளர்**

..................................................

**ஜு. வீ. நந்தகுமார்**
**பணிப்பாளர்**

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

## 2020ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

| | வெளியிட்ட மூலதனம் ரூ. | மூலதன ஒதுக்கம் ரூ. | பொது ஒதுக்கம் ரூ. | அபிவிருத்தி ஒதுக்கம் ரூ. | மறு மதிப்பிட்டு ஒதுக்கம் ரூ. | இருப்பு வருமானம் ரூ. | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 2019 **கணக்கீடு** | | | | | | | |
| **2019 ஜனவரி 01 உள்ளவாறு மீதி** | 15,000,000 | 102,491 | 1,000,000 | 13,901,142 | 808,011,707 | (446,833,123) | 391,182,216 |
| முந்திய வருட செம்மையாக்கல் | | | | | | (32,297,591) | (32,297,590) |
| ஆண்டுக்குரிய இலாபம் / நட்டம் வரிக்குப்பின் | | | | | | (169,428,397) | (132,297,346) |
| **மறுமதிப்பீட்டு இலாபம்** | | | | | | | |
| **2019 டிசம்பர் 31 உள்ளவாறு மீதி** | **15,000,000** | **102,491** | **1,000,000** | **13,901,142** | **808,011,707** | **(648,559,111)** | **226,587,280** |
| 2020 **கணக்கீடு** | | | | | | | |
| **2020 ஜனவரி 01 உள்ளவாறு மீதி** | 15,000,000 | 102,491 | 1,000,000 | 13,901,142 | 808,011,707 | (648,559,111) | 189,456,228 |
| முந்திய வருட செம்மையாக்கல் | | | | | | 42,727,155 | 42,727,155 |
| ஆண்டுக்குரிய இலாபம் / நட்டம் வரிக்குப்பின் | | (102,490) | (1,000,000) | (13,901,142) | | | (15,003,632) |
| **மறுமதிப்பீட்டு இலாபம்** | | | | | | | - |
| **2020 டிசம்பர் 31 உள்ளவாறு மீதி** | **15,000,000** | **-** | **-** | **-** | **808,011,707** | **(582,917,657)** | **240,094,051** |

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

## 2020ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

| | 2019<br>ரூ. | 2018<br>ரூ. |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளினால் காசுப்பாய்ச்சல்** | 22,914,300 | (169,428,397) |
| வரிக்கு முந்திய தேறிய இலாபம்/நட்டம் | | |
| செம்மையாக்கலுக்காக: | | |
| நிலையான சொத்துக்கள் மீதான தேய்மானம் | 53,859,274 | 61,465,802 |
| நடைமுறையில்லாத சொத்து விற்பனை இலாபம் | - | - |
| முந்திய வருட செம்மையாக்கல் | 44,828,920 | (37,836,055) |
| நிதிச் செலவினங்கள் | 120,358,632 | 149,163,926 |
| வருடம் முழுவதும் பணிக்கொடை ஏற்பாடு | - | 6,545,373 |
| கல்வி வெளியீட்டு திணைக்களத்து தாமதப் பணம் ஒதுக்குதல் | 5,762,226 | 9,028,466 |
| கல்வி வெளியீட்டு தாமதப் பணம் செலுத்துதல் | (9,028,466) | |
| கைவிடப்பட்ட கடன் | 1,984,063 | 5,597,804 |
| அச்சிடலுக்காக காகிதாதிகள் ஒதுக்குதல் | 1,447,150 | - |
| **தொழிற்படு மூலதன மாற்றத்துக்கு முந்திய செயற்பாட்டு இலாபம்** | **242,126,099** | **24,536,919** |
| **தொழிற்படு மூலதன விடயங்களின் மாற்றம்** | | |
| (அதிகரிப்பு) பொருட் பட்டியல்களில் குறைப்பு | (30,972,672) | 163,365,732 |
| (அதிகரிப்பு) வியாபார பெறுவனவுகளின் குறைப்பு | (218,629,402) | (108,206,398) |
| (அதிகரிப்பு)/ஏனைய பெறுவனவுகளின் குறைப்பு | 247,484 | 17,049,570 |
| அதிகரிப்பு/நடைமுறை பொறுப்புக்களின் (குறைப்பு) | 31,734,285 | 93,375,394 |
| **செயற்பாடுகளின் மூலம் ஈட்டப்பட்ட காசு** | **24,505,795** | **190,121,218** |
| செலுத்திய வரி | - | (1,700,000) |
| செலுத்திய ஊழியர் ஓய்வு கொடை | (16,913,658) | (29,993,918) |
| **செயற்பாடுகளின் காசுப்பாய்ச்சல்கள்** | **7,592,137** | **158,427,300** |
| **முதலீட்டு செயற்பாடுகளின் காசுப்பாய்ச்சல்கள்** | | |
| பி.பி.ஈ கொள்வனவு | - | - |
| பி.பி.ஈ விற்பனை | (7,788,303) | (13,496,714) |
| முதலீட்டு செயற்பாடுகளின் தேறிய காசுப்பாய்ச்சல்கள் | | |
| நிதிச் செயற்பாடுகளின் காசுப்பாய்ச்சல்கள் | **(7,788,303)** | **(13,496,714)** |
| கடன்பெறுவனவுகளுக்கான பெறுவனவுகள்/செலுத்துகை | 101,020,768 | 32,498,822 |
| வட்டி செலுத்தல் | (120,358,632) | (149,163,926) |
| **முதலீட்டு செயற்பாடுகளின் தேறிய காசுப்பாய்ச்சல்கள்** | **(19,337,864)** | **(116,665,104)** |
| **காசும் காசுக்கு சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு (குறைப்பு)** | (19,534,031) | 28,265,482 |
| **தவணை ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவைகள்** | 11,757,279 | (16,508,203) |
| **தவணை இறுதியில் காசும் காசுக்கு சமமானவைகள் (குறிப்பு 19)** | **(7,776,752)** | **11,757,279** |

## அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

# 2020 ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

## 1. கூட்டுத்தாபனம் பற்றிய தகவல்கள்

### 1.1 பொதுத் தகவல்

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் 1968 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் கீழ் 1968 ஆம் ஆண்டு கூட்டிணைக்கப்பட்டதுடன் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் பணிப்பாளர் சபையிடம் கையளிக்கப்பட்டது. இது பாதுக்க, பானலுவவில் அமைந்துள்ளது.

### 1.2 முக்கிய செயற்பாடுகளும் செயற்பாட்டின் தன்மையும்

கூட்டுத்தாபனத்தின் முக்கிய செயற்பாடுகளாக பாடசாலை பாடப்புத்தகங்களை அச்சிடுதல், பயிற்சிக் கொப்பிகளை தயாரித்தல் மற்றும் ஏனைய அச்சுப் பணிகள் என்பவற்றை குறிப்பிடலாம்.

## 2. தயாரிப்பின் அடிப்படை

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்திற்கு இணைவாக LKAS மற்றும் SLFRS என்பவற்றிற்கு ஏற்ப நிதி நிலைமை கூற்றுக்கள், விரிவான வருமான கூற்று, நிதி மாற்றங்கள் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள், கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.1 மதிப்பீட்டு அடிப்படை

நிதிக்கூற்றுக்கள் திரட்டல் முறை மற்றும் தொன்மை கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக்கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 2.2 மதிப்பீட்டு அடிப்படை

கீழ்தரப்பட்ட குறிப்புக்கள் தவிர்ந்து நிதி கூற்றுக்கள் சீர்செய்யப்பட்டிருப்பது தொன்மை கிரய அடிப்படையிலாகும்.

* விரிவுபடுத்தப்பட்ட வருமானக் கூற்றின் குறிப்பிடப்பட்ட வட்டி வருமானம்.
* கணக்கிடப்பட்ட சொத்துக்களின் மீள் பெறுமதி

### 2.3 தொடர்ச்சியாக இயங்குதல்

கூட்டுத்தாபனத்தை நடாத்திச் செல்வதற்கான ஆற்றல் சம்பந்தமாக பணிப்பாளர் சபை மதிப்பீடொன்றை மேற்கொண்டு கவனம் செலுத்தப்பட்டது. எவ்வாறிருந்தாலும் அதனை முடியுறுத்துவதோ அல்லது செயற்பாடுகளை நிறுத்துவதோ சபையின் நோக்கமல்ல.

### 2.4 பாவணையுள்ள காசு

இறுதியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது பாவணையிலுள்ள இலங்கை ரூபாவிலாகும். அனைத்து நிதி கூற்றுக்களும் முன்வைக்கப்பட்டுள்ளது இலங்கை ரூபா பெறுமதி அடிப்படையிலாகும். கிட்டிய ரூபா பெறுமதி காட்டப்பட்டுள்ளது.

### 2.5 கூட்டுத்தாபனத்தினால் முன்னைய

ஆண்டுகளில் பயன்படுத்தப்பட்டு வந்த கணக்கீட்டு கொள்கைகள் மாறுபடாது அதன் வடிவிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. தேவையான சந்தர்ப்பங்களில் முன்னைய ஆண்டுகளின் பெறுமதி மற்றும் குறிப்புக்கள் மீள் தயாரிப்பு செய்யப்பட்டு முன்வைக்கப்பட்டது. கூட்டுத்தாபனத்தினால் முன்னைய ஆண்டுகளின் பிழை திருத்தப்பட்டு சரி செய்யப்பட்ட நடைமுறையாண்டின் நிதிகூற்று மீள் வெளியிடப்பட்டது.

## 3. சிறப்பான கணக்கீட்டு கொள்கைகளின் சுருக்கம்

கீழ் தரப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகளில் அனைத்து காலகட்டத்துக்கும் உரிய அடிப்படையிலும் தொடர்ச்சியாக கூட்டுத்தாபனத்தினால் நிதிக்கூற்றுக்களில் முன்வைக்கப்பட்டுள்ளது.

### 3.1 சொத்து, பொறி மற்றும் இயந்திரங்கள்

சொத்து, பொறி மற்றும் இயந்திரங்கள் தேய்மான சேர்க்கப்பட்ட தேறிய கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள் இன்னும் பாவனையில் உள்ளன.

கீழ் தரப்பட்ட திகதிகளில் மதிப்பீட்டு திணைக்களத்தினால் சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| காணி மற்றும் அலுவலக | - 02.01.2017 இருந்து 06.01.2017 வரை |
| உபகரணம்<br>தளபாடங்கள் மற்றும் பொருத்துதல்<br>கணனி உதிரிப்பாகங்கள் | - 02.01.2017 இருந்து 30.01.2017 வரை |
| இயந்திராதிகள் | - 16.01.2017 இருந்து 30.01.2017 வரை |
| மோட்டார் போக்குவரத்து | - 13.01.2016 இருந்து 14.01.2016 வரை |

நிறுவனத்தின் நிதி நிலைமைகளை கருத்தில் கொள்ளும் போது SLAS இல் பரிந்துரைக்கப்பட்டபடி இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை சொத்துக்களை மறு மதிப்பீடு செய்ய முடியாது.

#### 3.1.1 தேய்மானம்

மதிப்பீடு செய்யப்பட்ட சொத்து, பொறிகள் மற்றும் இயந்திரங்களின் பயன்தகு ஆயுட்காலம் மீது நேரடி தேய்மான அடிப்படையில் தேய்மானம் கணக்கிடப்படும்.

நிகழ் மற்றும் ஒப்பீட்டு ஆண்டுகளுக்கான மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலம் பின்வருமாறு:

| | |
|---|---|
| கட்டிடங்கள் | 40 வருடங்கள் |
| பொறிகளும் இயந்திரங்களும் | 13.33 வருடங்கள் |
| மோட்டார் மற்றும் ஏனைய வாகனங்கள் | 04 வருடங்கள் |
| தளபாடங்களும் பொருத்துகைகளும் | 10 வருடங்கள் |
| கணினிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் | 03 வருடங்கள் |

### 3.2 பொருட் பட்டியல்

பொருட்பட்டியலானது குறைந்த கிரயம் மற்றும் தேறிய அட்டுறு பெறுமதியில் கணிப்பிடப்பட்டுள்ளது.

### 3.3 வரிவிதிப்பு

#### 3.3.1 வரி

நடப்பு ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுடனான ஒப்பீட்டு வருமான வரி செலுத்தல் மற்றும் சொத்து தேசிய வருமான ஆணையாளர் இற்கு செலுத்துவதற்கு மற்றும் பெற்றுக் கொள்ளலுக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வருமான வரி கணக்கீடு செய்யும் போது நிதி கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு அங்கிகாரமளிக்கபட்ட வரி வீதம் மற்றும் அன்றைய தின சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு செயற்படுத்தப்படும். வருமான வரி வேறுபடுத்தப்படும் போது நிதிகூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள வருமானம் மற்றும் செலவு வரவு செலவு அடிப்படையில் 2006 வருடத்தில் தேசிய வருமான ஆண்டறிக்கையின் 10 ஆவது பிரிவின் அடிப்படையில் மற்றும் அதன் பின் மேற்கொண்ட திருத்தங்களின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 3.4 காசும் காசுக்கு சமமானவைகளும்

கையிருப்பிலுள்ள காசு நடைமுறைக் காசு மற்றும் வங்கியிலுள்ள காசு, காசு மற்றும் காசுக்கு சமனானவைகளும் குறிக்கப்படும். நிதி அமைப்பு கூற்றில் வங்கி பற்று மற்றும் வங்கி மீதிக்கு அதிகமாக பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் காசு மற்றும் காசுக்கு சமனானவையாக கருதப்படும். காசு மற்றும் காசுக்கு சமனானவைகள் குறுகிய கால பணத்தேவை மற்றும் வேறு கொடுக்கல் வாங்கல்களுக்கு அதிக திரவத்தன்மையுடையதாக கருதப்படும்.

# 4. நிதி கருவிகள் - ஆரம்ப அங்கீகாரம் மற்றும் தொடர்ச்சியான அளவீடு

## 4.1 நிதிச் சொத்துக்கள்

### 4.1.1 வியாபார கடன்பட்டோர்

வியாபார கடன்பட்டோர் சாதாரண பெறுமதியில் நிதிக்கணக்குகளில் காட்டப்பட்டுள்ளன.

## 4.2 நிதி பொறுப்புக்கள்

### 4.2.1 சொத்துக்கள் ஈடு வைத்தல்

சகல வங்கி வசதிகள், வங்கி மிகைப்பற்று, குறுகிய கால கடன், நீண்ட கால கடன், கடன்பொறுப்பு, வங்கி பிணையாட்களுக்காக மக்கள் வங்கி இலக்கம் MB - 979/3063/3243/1147/422/5789 அதற்குரிய கூட்டுத்தாபன காணி கட்டிடங்கள் மற்றும் உபகரணங்கள் ஈடுவைத்துள்ளது.

இதற்கு மேலாக திறைசேரி பிணையாளர் ஒருவர் 2018. 09. 07 ஆம் திகதி இலக்கம் : TO/REV/TG/522 கீழ் கீழுள்ள வேலைத்திட்டத்துக்காக மக்கள் வங்கியின் மூலம் கடன் வசதி பெற்றுக் கொள்ளப்பட்டது.

| வேலைத்திட்டத்தின் பெயர் | பாதுகாப்பு நிதி (ரூ) | முடிவுத் திகதி |
|---|---|---|
| வங்கி மிகைப்பற்று, கடன் பொறுப்பு மற்றும் பொறுப்பு வசதிகளுக்காக | 1,165 மில்லியன் | 15.09.2021 |
| திருத்த வேலை மற்றும் செயற்பாட்டு அபிவிருத்திக்காக நிதி ஒதுக்குதல் | 185 மில்லியன் | 15.09.2023 |

### 4.2.2 ஐயப்பாட்டு பொறுப்பு

அனைத்து மூலதனம் பகிர்வு மற்றும் ஐயப்பாட்டு நிதி கூற்றுக்களில் தேவையான சரிபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கூட்டுத்தாபனத்தின் மூலம் அச்சிடப்படுகின்ற பாடசாலை பாடநூல்கள், அறநெறி பாடசாலை பாடநூல்கள், மற்றும் லொத்தர் சீட்டு அச்சிடல் மற்றும் பகிர்வு கல்வி வெளியீட்டுத் திணைக்களம், பௌத்த விவகார திணைக்களம் மற்றும் தேசிய லொத்தர் சபைக்கு வங்கி உத்தரவாதம் மற்றும் முற்பணம் செலுத்தல் சமர்ப்பிக்கப்பட்டது. ஐயப்பாட்டு பொறுப்பு மொத்த தொகை 130,695,700 ஆவதுடன் 2019.12.31 திகதிக்கு திறக்கப்பட்டுள்ள கடன் உத்தரவாத பெறுமதி 67,889,175 ஆகும்.

### 4.3.1 கையிருப்பு

கூட்டுத்தாபனத்தின் ஆரம்ப மூலதனம், பொதுவான கையிருப்பு மற்றும் அபிவிருத்தி கையிருப்பு உள்ளடங்கலாக அரசாங்கத்தின் ஒன்றிணைக்கப்பட்ட நிதியிலிருந்து உதவி வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| ஆரம்ப கையிருப்பு | ரூபா | 102,490.50 |
| அபிவிருத்தி கையிருப்பு | ரூபா | 13,901,142.23 |
| பொது கையிருப்பு | ரூபா | 1,000,000.00 |
| | ரூபா | **15,003,632.73** |

கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது முதல் இன்று வரை நிலையான மூலதனத்தில் எவ்வித மாற்றமும் இடம்பெறவில்லை.

### 4.3.2 மீள்மதிப்பீடு இருப்பு

இந்த இருப்புக்கு 2016 ஆண்டில் மோட்டார் வாகனம் மீள்மதிப்பீடு செய்வதில் பெற்றுக் கொண்ட இலாபம் மற்றும் கீழ்தரப்பட்டுள்ள படி உபகரணங்கள் மற்றும் மீள்மதிப்பீடு செய்த இலாபங்கள் உட்படுத்தப்பட்டுள்ளன.

| | 2016 (ரூ.) | 2017/18 (ரூ.) |
|---|---|---|
| மோட்டார் வாகனம் மற்றும் வேறு வாகனங்கள் | 36,015,363 | |
| சொத்துக்கள் | | 377,290,608 |
| கட்டிடங்கள் | | 158,049,568 |
| பொறிகளும் இயந்திரங்களும் | | 246,979,194 |
| காரியாலய உபகரணங்கள் | | (8,785,874) |
| கணணி மற்றும் உதிரிப்பாகங்கள் | | (1,537,152) |
| | **36,015,363** | **771,996,344** |

## 5. ஓய்வு பயன் பொறுப்புறுதிகள்

### 5.1 ஓய்வு பயன் பொறுப்புறுதிகள்

1983 இல 12 ஒய்வு பயன் பொறுப்புறுதிகள் சுற்று நிருபனத்தின் கீழ் ஓய்வு பயன் பொறுப்புறுதிகள் செலுத்துவதற்கு கூட்டுத்தாபனம் பொறுப்புடையதாகும் இதுவரைக்கும் உரிய நேரத்தில் இதனை செலுத்தியுள்ளதுடன் 2019.12.31 திகக்கு ஓய்வு பயன் பொறுப்பு ஒதுக்கப்படுவதற்கு இது தொடர்பான நிதி அமைப்பொன்று காணப்படவில்லை.

### 5.2 ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி

ஊ. சே. நி. மற்றும் ஊ. ந. நி யின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக சேவை வழங்குனர் உரிய நிதிக்கு 12% மற்றும் 3% என்று அடிப்படையில் அடிப்படை சம்பளத்தை கருத்திற் கொண்டு செலுத்தல் வேண்டும்.

## 6. வருமானமும் செலவினங்களும்

### 6.1 வருமான இனங்காணல்

சகல வருமானமும் தொன்மை கிரய அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளது.

**வட்டி வருமானம்**

கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களுக்கு 10% வட்டி அறவிடப்பட்டுள்ளது.

### 6.2 செலவுகளை இணங்காணல்

**வரவு செலவு**

கூட்டுத்தாபனத்தை நடத்திச் செல்வதற்கு சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் செயற் திறன்மிக்கதாக பராமரிப்பு செய்வதற்கான அனைத்து செலவினங்கள் வருடத்தினுள் வருமானத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**மூலதனச் செலவு**

கூட்டுத்தாபத்தின் சொத்து மற்றும் உபகரணங்கள் வருமான அளவை விருத்தி செய்வது மற்றும் முன்னோக்கி கொண்டு செல்வதற்காக சொத்துக்களை கைப்பற்றிக் கொள்ளல் மற்றும் நீடித்தல் மற்றும்.

### 6.3 கடன் பெறுவதற்கான கிரயம்

ஏற்கப்பட்ட காலப்பகுதியில் ஏற்பட்ட சகல கடன் பெறுவதற்கான கிரயங்களும் செலவினங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்கள் போன்றவற்றை செயற்படுத்துவதற்குரியதும், இதற்குரிய வட்டி செலவினங்களையும் மதிப்பிட்டுள்ளது.

## 2020ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

| | 2020<br>ரூ. | 2019<br>ரூ. |
|---|---|---|
| **07. வருமானம்** | | |
| காகிதாதிகள் தொழிற்சாலையின் வருமானம் | 122,003,076 | 166,442,486 |
| பிரதான அச்சக வருமானம் | | |
| பாடப்புத்தகங்கள் | 1,369,812,655 | 979,237,857 |
| தொழில்கள் | 65,561,401 | 157,645,499 |
| லொத்தர் சீட்டு | 266,593,026 | 268,941,482 |
| வெளியீடு | 410,186 | 2,872,246 |
| ஏனைய விற்பனை வருமானம் | 18,709,825 | 18,675,619 |
| | **1,843,090,170** | **1,593,815,189** |
| **08. விற்பனைச் செலவு** | | |
| பிரதான அச்சகம் | | |
| உபயோகித்த மூலப்பொருள் | 764,884,230 | 629,573,639 |
| நேரடி உழைப்பு | 220,626,316 | 189,321,830 |
| நேரடி தொழிற்சாலை செலவு | 51,401,247 | 43,412,565 |
| ஏனைய தொழிற்சாலை செலவு | 159,206,936 | 88,242,585 |
| ஏனைய செலவுகள் | 115,659,495 | 105,170,522 |
| தாமதக் கட்டணம் (தண்டப்பணம்) (க.வெ.தி) | 29,789,127 | 69,264,953 |
| தாமதக் கட்டணம் (தணடப்பணம்) (தே.லொ.ச.) | 11,205,760 | 8,481,350 |
| (க.வெ.தி.) தாமதக் கட்டணம் ஒதுக்குதல் | 5,762,226 | 9,028,466 |
| | **1,358,535,338** | **1,142,495,910** |
| **காகிதாதி தொழிற்சாலை** | | |
| உபயோகித்த மூலப்பொருள் | 109,757,992 | 101,065,522 |
| நேரடி உழைப்பு | 33,562,154 | 30,348,260 |
| நேரடி தொழிற்சாலை செலவு | 3,012,310 | 2,391,960 |
| ஏனைய தொழிற்சாலை செலவு | 15,490,986 | 8,927,598 |
| ஏனைய செலவுகள் | (43,996,230) | 14,819,655 |
| | **117,827,212** | **157,552,995** |
| வெளியீட்டு பகுதியின் செலவு | 3,007,535 | 5,336,363 |
| ஏனைய பகுதிகளின் செலவுகள் | 14,837,994 | 14,764,217 |
| மொத்த விற்பனைச் செலவு | **1,494,208,078** | **1,320,149,485** |
| **09. ஏனைய பராமரிப்பு வருமானம்** | | |
| ஏனைய வருமானங்கள் | 19,686,846 | 19,010,602 |
| கேள்விப்பத்திர வைப்பு | 554,000 | 1,042,015 |
| சிற்றுண்டிச்சாலை மூலம் கிடைத்த இலாபம் | - | 12,800 |
| | **20,240,846** | **20,065,417** |

| | 2020 | 2019 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| **10. விநியோகச் செலவு** | | |
| தேசிய கட்டிட வரி | 2,802,242 | 15,450,486 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 9,215,451 | 7,969,075 |
| மோட்டார் வாகன பராமரிப்புச் செலவு | 2,812,178 | 4,746,399 |
| விளம்பரம் | 261,288 | 518,688 |
| விற்பனை மேம்படுத்தல் | 1,095,827 | 800,841 |
| அறவிட முடியாக்கடன் ஏற்பாடு | 1,984,063 | 5,597,804 |
| தீக் காப்புறுதி - விற்பனைக் கூடம் | 112,805 | 59,752 |
| விற்பனைக் (கொமிஸ்) | - | 60,009 |
| போக்குவரத்துச் செலவு முடிவுப் பொருளுக்கு | - | 4,258 |
| மீள் செலுத்தப் படாத டென்டர் வைப்பு | 166,427 | 100,345 |
| வாடகை | 2,956,016 | 3,451,975 |
| வரிப்பணம் | 39,369 | 94,575 |
| நீர் கட்டணம் | 36,207 | 51,566 |
| மின்சாரம் | 103,168 | 133,656 |
| தொலைபேசி | 189,969 | - |
| | **21,775,010** | **39,039,429** |
| **11. நிர்வாக செலவினங்கள்** | | |
| காணி, கட்டிட நிர்வாகம் | 505,784 | 466,112 |
| அலுவலக தளபாட பராமரிப்பு | 649,239 | 541,526 |
| தேய்மானம் - அலுவலக தளபாடம் | 1,363,012 | 1,325,311 |
| கணினி மென்பொருள் | 233,676 | 1,928,133 |
| மோட்டார் சைக்கிள்கள் | - | 64,375 |
| சம்பளங்களும் படிகளும் | 123,819,539 | 127,816,664 |
| ஊழியர் மேலதிக நேரம் | 9,986,770 | 8,809,290 |
| ஊழியர் சேமலாப நிதி | 15,250,427 | 16,067,361 |
| ஊழியர் நம்பிக்கை நிதி | 3,740,731 | 4,016,842 |
| ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் | 1,801,250 | 1,949,750 |
| தவிசாளர் ஊதியம் | 960,000 | 447,229 |
| பணிப்பாளர் ஊதியம் | - | 416,116 |
| பணிப்பாளர் சபை கட்டணங்கள் | 356,500 | 388,450 |
| தபால் செலவு | 137,708 | 232,264 |
| தொலைபேசி | 1,195,010 | 1,227,298 |
| அறிவித்தல் மற்றும் வெளியீடுகளை அச்சிடல் | 1,760,971 | 2,479,384 |
| பத்திரிகை விளம்பரம் மற்றும் வெளியீடுகள் | 883,424 | 1,001,025 |
| போக்குவரத்து | 734,678 | 1,210,284 |
| பத்திரிகை மற்றும் சஞ்சிகைகள் | 67,060 | 116,920 |
| | 14,500 | - |
| பொது அலுவலக செலவினங்கள் | - | - |
| கணக்காய்வு கட்டணம் | 185,542 | 214,241 |
| இதர செலவினங்கள் | 900,000 | 443,573 |
| சட்ட மற்றும் ஆலோசனை சேவை | 50,751 | 95,255 |
| களியாட்டம் | 533,162 | 80,679 |
| பணிக்கொடை செலவினங்கள் | 123,528 | 132,559 |
| ஊழியர் பயிற்சி | - | 6,545,373 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கட்டணம் | 137,675 | 442,120 |
| இணையத்தளம்/மின்னஞ்சல் | 48,500 | 129,000 |
| கேள்வி பத்திர சபை தொழில்நுட்ப கட்டணங்கள் | 192,252 | 184,670 |
| மோட்டார் வாகன பராமரிப்பு 25% | 1,088,000 | 600,000 |
| | 2,812,178 | 4,746,399 |

| | 2020 ரூ. | 2019 ரூ. |
|---|---|---|
| தங்குமிடம் | - | - |
| பணிப்பாளர் சபை கூட்ட செலவினங்கள் | 32,713 | 28,370 |
| உறுப்பினர் கட்டணங்கள் | 50,000 | 42,000 |
| நன்கொடை | 7,179 | 390,973 |
| கணினி பணியக சேவை கட்டணங்கள் | 345,300 | 256,500 |
| பணம் கொண்டு செல்லும் செலவு | - | - |
| பணம் கொண்டு செல்லும் பாதுகாப்பு செலவு | - | - |
| வினியோகத்தர் பதிவுக் கட்டணம் | 163,883 | 94,815 |
| வெளிவாரி அச்சு வேலை | 45,500 | - |
| | **170,176,441** | **184,930,860** |
| **12. ஏனைய செயற்பாட்டு செலவினங்கள்** | | |
| ஊழியர் சேமநலன் | 18,935,987 | 21,171,114 |
| ஊழியர் மருத்துவ திட்டம் | 8,158,170 | 9,430,899 |
| ஊழியர் போக்குவரத்து | 1,772,844 | 2,087,229 |
| ஊழியர் வெகுமதி | - | 22,097,071 |
| விசேட ஊக்குவிப்பு கொடுப்பனவு | - | 15,675,000 |
| விடுமுறை கொடுப்பனவு | 6,962,117 | 8,503,040 |
| வீட்டுக்கடன் வட்டி | - | 13,210,825 |
| ஊழியர் விருதுகள் | 47,250 | 106,750 |
| | **35,876,369** | **92,281,928** |
| **13. வருமான செலவினங்கள்** | | |
| வங்கி கட்டணங்கள் | 1,827,378 | 9,877,393 |
| வங்கி மேலதிகப்பற்று வட்டி | 4,993,996 | 6,142,227 |
| வங்கி கடன் வட்டி – குறுகிய காலம் | 100,764,950 | 111,597,091 |
| வங்கி கடன் வட்டி – நீண்ட காலம் | 12,772,308 | 21,547,216 |
| | **120,358,632** | **149,163,926** |
| **14. வருமான வரி** | | |
| வருடாந்த வருமான வேறுபடுத்தல் 14.1 | - | - |
| | - | - |

**14.1 வருமான வரி கணக்கீடு வருடம் 2020 - 2021**

**2020 திசம்பர் 31 இல் நிறைவடைந்த நிதியாண்டு**

| | ரூ. |
|---|---|
| வியாபாரம் அல்லது வர்த்தகம் மூலம் அறவிட முடியுமான இலாபம் | 22,732,116 |
| வட்டி வருமானம் | - |
| காகிதாதி மூலமான இலாபம் | - |
| கழி : மொத்த காகிதாதி வருமானத்திலிருத்து குறைதல் | 22,732,116 |
| வியாபாரம் மூலம் குறைக்க முடியுமான நட்டம் | |
| வட்டி, தவணைக்கட்டணம், வாடகை மற்றும் நூலாசிரியர் செலவு | (22,732,116) |
| குத்தகை வருமானம் | - |

## 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

### 15. சொத்து, தொழிற்சாலை மற்றும் உபகரணங்கள்

| விபரம் | மறுமதிப்பீடு 01. 01. 2019 | ஆண்டின் சேர்த்தல்கள் / மீள்பெறுமதியிடல்கள் | ஆண்டின் வெளியேற்றங்கள் | செலவு மறுமதிப்பீடு 31. 12. 2019 உள்ளவாறு | ஆண்டின் வெளியேற்றங்கள் | மறுமதிப்பீடு 01.01.2020 | சேர்த்தல் மீள்பெறுமதியிடல்கள் 2020 | 31. 12. 2020 உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|---|---|
| **கிரயத்தில்** | | | | | | | | |
| காணி | 378,500,000 | - | - | 378,500,000 | - | 378,500,000 | - | 378,500,000 |
| கட்டிடம் | 166,600,000 | - | - | 166,600,000 | - | 166,600,000 | - | 166,600,000 |
| * தொழிற்சாலை மற்றும் இயந்திரங்கள் | 535,357,077 | 10,609,349 | - | 545,966,426 | - | 545,966,426 | 6,144,748 | 552,111,174 |
| மோட்டார் வாகனம் மற்றும் ஏனைய வாகனங்கள் | 55,563,000 | - | - | 55,563,000 | - | 55,563,000 | - | 55,563,000 |
| ** தொழிற்சாலை கருவிகள் வகைகள் | 10,833,834 | 2,887,365 | - | 13,721,199.00 | - | 13,721,199 | 810,041 | 14,531,240 |
| கணினி, பாகங்கள் | 5,785,210 | - | - | 5,785,210 | - | 5,785,210 | 833,514 | 6,618,724 |
| இலத்திரனியல் மீள் உள்ளீடுகள் | 2,572,951 | - | - | 2,572,951 | - | 2,572,951 | - | 2,572,951 |
| **மொத்தம்** | **1,155,212,072** | **13,496,714** | **-** | **1,168,708,786** | **-** | **1,168,708,786** | **7,788,303** | **1,176,497,089** |

**சேர்க்கப்பட்ட தேய்மானம்**

| விபரம் | மறுமதிப்பீடு **01.01.2019** | வருடாந்த தேய்மானம் **2019** | ஆண்டின் வெளியேறங்கள் | ஆண்டின் மொத்த தேய்மானம் **31.12.2019** | ஆண்டின் வெளியேற்றங்கள் | மறுமதிப்பீடு **01.01.2020** | வருடாந்த தேய்மானம் **2020** | ஆண்டின் மொத்த தேய்மானம் **31.12.2020** |
|---|---|---|---|---|---|---|---|---|
| கட்டிடம் | 8,330,000 | 4,165,000 | - | 12,495,000 | - | 12,495,000 | 4,165,000 | 16,660,000 |
| தொழிற்சாலை மற்றும் இயந்திரங்கள் | 65,128,247 | 40,156,610 | - | 105,284,857 | - | 105,284,857 | 41,154,235 | 146,439,092 |
| மோட்டார் மற்றும் ஏனைய வாகனங்கள் | 34,728,875 | 13,890,750 | | 48,619,625 | - | 48,619,625 | 6,943,351 | 55,562,976 |
| அலுவலக தளபாடங்கள் | 1,720,312 | 1,325,310 | - | 3,045,622 | - | 3,045,622 | 1,363,012 | 4,408,634 |
| கணினி, பாகங்கள் | 3,637,380 | 1,928,132 | - | 5,565,512 | - | 5,565,512 | 233,676 | 5,799,188 |
| இலத்திரனியல் மீள் உள்ளீடுகள் | 2,572,950 | - | - | 2,572,950 | - | 2,572,950 | - | 2,572,950 |
| **மொத்தம்** | | **61,465,802** | **-** | **177,583,565** | **-** | **177,583,565** | **53,859,274** | **231,442,839** |
| **எழுத்துப் பெறுமதி** | | | | **991,125,221** | | | | **945,054,250** |

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

## 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில்
## உள்ளவாறான நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

| | 2020 | 2019 |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| **16. பொருட்பட்டியல்கள்** | | |
| மூலப்பொருட்கள் | 134,155,985 | 95,086,893 |
| பாவனைப்பொருட்கள் | 7,987,214 | 9,408,053 |
| உதிரிப்பாகங்கள் | 44,165,115 | 36,733,611 |
| கட்டுமானப்பொருட்கள் | 1,188,782 | 946,267 |
| முடிவுப்பொருட்கள் | 74,834,655 | 72,762,017 |
| உற்பத்தியாகும் பொருட்கள் | 43,774,599 | 56,729,063 |
| Good In Transit ( S/P ) | - | 3,467,774 |
| | **306,106,350** | **275,133,678** |
| **17. வியாபார பெறுவனவுகள்** | | |
| வியாபார கடன்படுநர் | 653,613,934 | 434,984,532 |
| கழிக்க – அறிவிட முடியாக்கடன் ஏற்பாடு | (35,033,326) | (33,049,263) |
| EPD தரம் குறைவு தண்டம் | (5,762,226) | (9,028,466) |
| ஏற்பாட்டுக்காக ஏனைய கடன்கொடுநர் | 361,309 | 361,309 |
| | **613,179,690** | **393,268,112** |
| **18. ஏனைய பெறுவனவுகள்** | | |
| பணியாட்தொகுதி கடன் மற்றும் முற்பணம் (குறிப்பு 19.1) | 6,093,339 | 8,817,032 |
| வைப்புக்கள் மற்றும் பெறுவனவுகள் (குறிப்பு 19.2) | 9,761,392 | 10,266,188 |
| விற்பனை கட்டுப்பாட்டு கணக்குகள் (குறிப்பு 19.3) | (1,561,835.69) | (4,673,971.09) |
| வங்கி கடன் - தொங்கல் கணக்கு | 14,533,440 | 14,533,440 |
| பெற்றுக்கொள்ளக் கூடிய வரி (VAT முன்.கொ.செ) | - | - |
| | **28,826,335** | **28,942,689** |
| **18.1 பணியாட்தொகுதி கடன் மற்றும் முற்பணம்** | | |
| இடர் கடன்கள் | 3,128,277 | 5,332,274 |
| பண்டிகை முற்பணம் | 2,072,000 | 2,204,000 |
| பணியாட்தொகுதி சம்பள முற்பணம் | 5,000 | - |
| கடன்கொடுநர் முற்பண கணக்கு | 888,062 | 1,280,758 |
| | **6,093,339** | **8,817,032** |
| **18.2 வைப்புக்களும் பெறுவனவுகளும்** | | |
| வைப்புக்கள் பெறுவனவுகள் | 9,316,005 | 9,766,198 |
| சேர்க்க. ஏனைய பெறுவனவுகள் | 445,387 | 499,990 |
| | **9,761,392** | **10,266,188** |
| 18.3 **விற்பனை கட்டுப்பாட்டு கணக்கு** | | |
| விற்பனை கட்டுப்பாட்டு கணக்கு | **(1,561,836)** | **(4,673,971)** |
| | **(1,561,836)** | **(4,673,971)** |
| **19. காசும் காசுக்கு சமமானவைகளும்** | | |
| வங்கியிலுள்ள காசு | 35,501,418 | 30,841,763 |
| வழியிடைப்பணம் | 603,662 | 530,716 |
| கையிலுள்ள காசு | 30,000 | 86,873 |
| | **36,135,080** | **31,459,352** |

காசுப்பாய்ச்சல், காசும் காசுக்கு சமமானவைகள் கூற்றின் பயன்பாட்டிற்காக பின்வருவன உள்ளடக்கப்படுகின்றன.

| | 2020 ரூ. | 2019 ரூ. |
|---|---|---|
| வங்கியிலுள்ள காசு | 35,501,418 | 30,841,763 |
| வழியிடைப்பணம் | 603,662 | 530,716 |
| கையிலுள்ள காசு | 30,000 | 86,873 |
| | **36,135,080** | **31,459,352** |
| வங்கி மேலதிகப்பற்று | (43,911,832) | (19,702,073) |
| | **(7,776,752)** | **11,757,279** |
| 20. **வங்கிக் கடன் நீண்ட காலம்** | | |
| 2019. 01. 01 திகதிக்கு ஆரம்ப நிலுவை | 136,642,139 | 174,000,236 |
| வருடத்தினுள் கடனுக்கான செலுத்தல்கள் | (43,725,084) | (37,358,097) |
| வருட முடிவில் மிகுதி | **92,917,055** | **136,642,139** |
| 21. **வேறுபட்ட வரி பொறுப்புக்கள்** | | |
| வருட ஆரம்ப திகதிக்கு | (17,105,398) | (11,566,933) |
| வருடத்தினுல் ஆரம்பிக்கப்பட்ட/ | - | (5,538,465) |
| தற்காலிக மாற்றங்கள் | 17,105,398 | |
| வருட முடிவுத் திகதிக்கு | **-** | **(17,105,398)** |

* வேறுபட்ட வரி பொறுப்புக்களை இவ்வருட வருடாந்த அறிக்கையில் வேறுபடுத்தப்படவில்லை. கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக 5 வருடங்கள் நட்டத்தில் இயங்கியதால்

சொத்துக்களுக்கான வரி வேறுபாடு - **ரூ.** (803,098,357)

வெளியேற்றங்களுக்கான நட்டம் - **ரூ.** 929,879,682

வேறுபட்ட வரி பொறுப்புக்களை சரிபடுத்தல் - **ரூ.** 17,105,398/- 2017 / 2018 வருடங்களுக்கானது

| | 2020 | 2019 |
|---|---|---|
| 22. **வியாபார கொடுப்பனவுகள்** | | |
| வியாபார கடன் கொடுநர் | 117,459,149 | 47,478,490 |
| ஏனைய கடன்கொடுநர் | 1,690,775 | 1,805,999 |
| உள்நாட்டு இறைவரித்திணைக்களம் | 207,799,230 | 189,965,706 |
| விற்பனை முற்பணம் | 17,584 | 16,194 |
| வேறு கடன்பட்டோர் (கடன் மீதி) | 1,279,658 | 1,279,658 |
| | **328,246,396** | **240,546,047** |
| 23. **ஏனைய கொடுப்பனவுகள்** | | |
| திரண்ட செலவு | 36,472,800 | 69,520,565 |
| வைப்பு கொடுப்பனவு | 1,884,462 | 1,805,962 |
| ஊழியர்களுக்காக பெற்றுக் கொடுக்கப்படும் அப்பியாச கொப்பிகளுக்காக ஒதுக்குதல். | 1,447,150 | - |
| | **39,804,411** | **71,326,527** |
| 24. **வட்டி தாங்கும் கடன்** | | |
| குறுகிய கால வங்கிக் கடன் | 840,717,598 | 770,860,679 |
| ஆரம்ப மீதி 01.01.2020 | 1,502,920,429 | 1,094,567,698 |
| புதிய கடன் | (1,358,174,578) | (1,024,710,779) |
| கடன் செலுத்தப்பட்டது | **985,463,449** | **840,717,598** |
| இறுதி மீதி 31.12.2020 | | |

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்
தொழிற்பாட்டு கணக்கு (பிரதான அச்சகம்) 01. 01. 2020 இல் இருந்து 31. 12. 2020 வரையானது

| | வருடமுடிவு **31/12/2020 (ரூ.)** | வருடமுடிவு **31/12/2019 (ரூ.)** |
|---|---|---|
| அச்சிடுவதில் இருந்து வருமானம் | | |
| பாடநூல்கள் | 1,369,812,655 | 979,237,857 |
| ( - ) தாமதக் கட்டணம் செலுத்துதல் / தரக்குறைவு | (29,789,127) | (69,264,953) |
| மற்றும் தண்டப் பணம் (க.வெ.தி)) | (5,762,226) | (9,028,466) |
| லொத்தர் அச்சிடுதல் (தே.லொ.ச.) | 266,593,026 | 268,941,482 |
| ( - ) தாமதக் கட்டணம் செலுத்துதல் (தே.லொ.ச.) | (11,205,760) | (8,481,350) |
| Job Works | 65,561,401 | 157,645,499 |
| **( 1 ) மொத்த வருமானம்** | **1,655,209,969** | **1,319,050,069** |
| **தொழிற்சாலை செலவினங்கள் நேரடி** | | |
| உபயோகித்த மூலப்பொருள் | 764,884,230 | 629,573,639 |
| நுகர்வுக்கு உபயோகித்த மூலப் பொருட்கள் | 13,938,266 | 16,563,902 |
| உதிரிப்பாகங்கள் உபயோகித்தல் | 22,789,300 | 12,654,408 |
| இரும்புப் பொருட்கள் உபயோகம் | 3,647,747 | 2,896,051 |
| **( 2 ) மொத்த உபயோகம்** | **805,259,543** | **661,688,000** |
| **ஊதியம் - நேரடி** | | |
| சம்பளங்கள், ஊதியங்கள் | 136,348,132 | 132,397,116 |
| ஊழியர்களுக்கு மேலதிக நேர வேலை | 22,924,576 | 33,571,776 |
| துண்டு அடிப்படையில் வேலை | 37,362,743 | |
| ஊழியர் சேமலாப நிதி | 17,600,448 | 16,993,501 |
| ஊழியர் நம்பிக்கை நிதி | 4,235,417 | 4,313,937 |
| ஊழியர் ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் | 2,155,000 | 2,045,500 |
| **( 3 ) மொத்த ஊதியம் நேரடி** | **220,626,316** | **189,321,830** |
| **( 4 ) மின்சாரம்** | **11,025,934** | **11,298,204** |
| **( 5 ) மொத்த செலவு [ 2 + 3 + 4 ]** | **1,036,911,793** | **862,308,033** |
| **தொழிற்சாலை செலவினம் (மறைமுகம்)** | | |
| சம்பளங்கள், ஊதியங்கள் | 28,718,602 | 25,374,693 |
| ஊழியர்களுக்கு மேலதிக நேர வேலை | 9,835,526 | 4,747,556 |
| துண்டு அடிப்படையில் வேலை | 3,679,978 | 3,261,553 |
| ஊழியர் சேமலாப நிதி | 1,156,568 | 811,608 |
| ஊழியர் நம்பிக்கை நிதி | 420,000 | 380,750 |
| இயந்திராதிகள் மற்றும் பராமரிப்பு | 8,778,632 | 3,661,418 |
| வெளிவாரி வேலை (தே. லொ.ச.) | 53,371,052 | 611,415 |
| பார்க்கொடிங் பராமரிப்பு | 9,324,550 | 5,240,000 |
| மின்சாரம் | 1,225,104 | 1,255,356 |
| தீ காப்புறுதி | 631,264 | 644,129 |
| மாதிரி மற்றும் கடதாசி சோதனை செய்தல் | 40,177 | 786 |
| இயந்திரம் கூலிக்கு கொள்வனவு செய்தல் | 505,840 | 118,000 |
| ஊழியர் சீருடை | 320,919 | - |

| | | |
|---|---|---|
| **வாகனங்களுக்கான செலவு** | | |
| வாகனங்களுக்கான செலவு | 1,384,247 | 1,984,613 |
| திருத்துதல் | 2,221,598 | 2,605,471 |
| காப்புறுதி | 699,514 | 569,138 |
| **குறைதல்** | 6,943,351 | 13,826,375 |
| Less :- | | |
| 25% இலாபநட்ட கணக்கின் நிர்வாக செலவு | (2,812,178) | (4,746,399) |
| 25% விற்பனை மற்றும் பங்கிடல் செலவு | (2,812,178) | (4,746,399) |
| 25% காகிதாதி தொழிற்சாலை a/c | (2,812,178) | (4,746,399) |
| குறைதல் | | |
| கட்டிடம் | 3,757,500 | 3,757,500 |
| இயந்திராதிகள் | 34,629,048 | 33,631,422 |
| **( 6 ) மொத்த மறைமுக செலவினங்கள்** | **159,206,936** | **88,242,585** |
| **( 7 ) உற்பத்தி செலவினம் [ 5 + 6 ]** | **1,214,341,363** | **950,550,619** |
| கூட்டி : திறந்த இருப்பு நடைமுறையிலுள்ள வேலை | 47,654,896 | 69,041,424 |
| திறந்த இருப்பு பூர்த்தியான பொருட்கள் | 27,520,231 | 50,534,694 |
| குறைதல் : கடைசி இருப்பு முடிவுப் பொருள் இல்லாதது | (15,109,365) | (47,654,896) |
| கடை இருப்பு முடிவடைந்த தொகை | (2,553) | (27,520,231) |
| குறைதல் : அச்சு வேலை செலவுகள் | (1,760,971) | (2,479,384) |
| காகிதாதி தொழிற்சாலை செலவுகள் | 0 | (2,022,569) |
| காகிதாதி தொழிற்சாலை A/C மாற்றப்பட்டது. | (253,960) | (2,084,791) |
| வருமானம் மற்றும் செலவினங்கள் கானக்கிற்கு மாற்றப்பட்டது | 42,295 | - |
| சேதமடைந்த தொகை | 57,568,922 | 67,356,274 |
| **( 8 ) மொத்த உற்பத்தி செலவினம்** | **1,330,000,858** | **1,055,721,140** |
| **( 9 ) மொத்த இலாபம் [ 1 - 8 ]** | **325,209,111** | **263,328,929** |

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

**செயற்பாட்டு காளம் (காகிதாதி தொழிற்சாலை)**

**2020. 12. 31 தொடக்கம் 2020. 12. 31 வரை**

| | வருடமுடிவு **31/12/2020** **(ரூ.)** | வருடமுடிவு **31/12/2019** **(ரூ.)** |
|---|---|---|
| **( 1 ) காகிதாதி விற்பனை வருமானம்** | **122,003,076** | **166,442,486** |
| **தொழிற்சாலை செலவினம் - (நேரடி)** | | |
| மொத்த வருமானம் உபயோகம் | 109,757,992 | 101,065,522 |
| வாடிக்கையாளர்கள் பொருட்கள் உபயோகம் | 620,802 | 914,569 |
| உதிரிப்பாகங்கள் | 1,254,586 | 313,544 |
| **( 2 ) மொத்த உபயோகம்** | **111,633,380** | **102,293,636** |
| **ஊதியம் - நேரடி** | | |
| சம்பளங்களும் படிகளும் | 24,096,879 | 23,695,092 |
| ஊழியர் மேலதிக நேரம் | 4,645,854 | 2,520,082 |
| துண்டு அடிப்படையில் வேலை | 536,253 | - |
| ஊழியர் சேமலாப நிதி | 3,131,534 | 3,064,123 |
| ஊழியர் நம்பிக்கை நிதி | 782,884 | 700,713 |
| ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் | 368,750 | 368,250 |
| **( 3 ) மொத்த ஊதியம்** | **33,562,154** | **30,348,260** |
| **தொழிற்சாலை செலவினங்கள் நேரடி** | | |
| **( 4 ) மின்சாரம்** | **1,136,922** | **1,163,847** |
| **( 5 ) தொழிற்சாலை செலவுகள் நேரடி [ 2 + 3 + 4 ]** | **146,332,456** | **133,805,743** |
| **தொழிற்சாலை செலவுகள் மறைமுகம்** | | |
| சம்பளங்களும் படிகளும் | 6,179,839 | 1,471,879 |
| ஊழியர் மேலதிக நேரம் | 514,437 | 131,062 |
| ஊழியர் சேமலாப நிதி | 1,068,358 | 170,698 |
| ஊழியர் நம்பிக்கை நிதி | 267,089 | 46,455 |
| ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் | 70,250 | 17,500 |
| இயந்திராதிகள் மற்றும் பராமரிப்பு | 332,000 | 28,000 |
| மின்சாரம் | 126,325 | 129,316 |
| செலவுகள் | | |
| கட்டிடம் | 407,500 | 407,500 |
| இயந்திராதிகள் | 6,525,188 | 6,525,188 |
| **( 6 ) தொழிற்சாலை செலவுகள் மறைமுகம்** | **15,490,986** | **8,927,598** |
| **( 7 ) உற்பத்திச் செலவினம் [ 5 + 6 ]** | **161,823,441** | **142,733,341** |
| சேர்க்கப்பட்டுள்ளது : ஆரம்ப இருப்பு | | |
| முடிக்கப்படாத வேலை | 9,074,168 | 10,299,531 |
| பூர்த்தி செய்யப்பட்ட பொருட்கள் | 33,501,798 | 41,793,457 |
| கழிக்கப்பட்டுள்ளது | | |
| முடிக்கப்படாத வேலை | (28,665,234) | (9,074,168) |
| பூர்த்தி செய்யப்பட்ட பொருட்கள் | (60,751,160) | (33,501,798) |
| கழித்தல் : Trf. அச்சிடல் மற்றும் காகிதாதி கணக்குக்கு மாற்றப்பட்டது, | | |
| ஊழியர் நலனோம்பல், அன்பளிப்பு மற்றும் பிரதான அச்சக செயற்பாட்டு | | (1,422,449) |
| கணக்கின் பெறுமதிக்கு மாற்றப்பட்டது. மோட்டார் வாகன பெறுமதி பிரதான அச்சக | - | 2,022,569 |
| செயற்பாட்டு கணக்கிற்கு மாற்றப்பட்டது 25% தொகை | 2,812,178 | 4,746,399 |
| துண்டுவிழுதல் | (39,725) | (115,549) |
| தொகை அதிகரித்தல் | 71,747 | 71,663 |
| **( 8 ) மொத்த உற்பத்தி செலவு** | **117,827,212** | **157,552,996** |
| **( 9 ) விகிதாசார செயற்பாட்டு இலாபம் [ 1 - 8 ]** | **4,175,864** | **8,889,489** |

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

**வருமானம் மற்றும் செலவு (வெளீயீட்டு பிரிவு)**

**2020.01.01 தொடக்கம் 2020.12.31 சரையாக கலெப்பகுதி**

| | வருடமுடிவு **31/12/2020** **(ரூ.)** | வருடமுடிவு **31/12/2019** **(ரூ.)** |
|---|---|---|
| **வருமானம்** | **410,186** | **2,872,247** |
| கழித்தல் : உற்பத்தி செலவினம் | | |
| ஆரம்ப இருப்பு | 4,002,452 | 5,241,035 |
| கூட்டு :உற்பத்தி செலவினம் பிரதான அச்சக செயற்பாட்டு கணக்குக்கு மாற்றப்பட்டது | 253,960 | 2,084,791 |
| கூட்டு : தொகை துண்டுவிழுதல் தொகை அதிகரித்தல் | (8,385) | (27,031) |
| உற்பத்தி செலவினம் | 1,707 | 32,339 |
| கழி : வெளியீடு மற்றும் மற்றைய வருமானம் வெளியீட்டு ஆலோசனை செலவு | (8,331) | (23,303) |
| கூட்டு : வருமானம் | (3,476,962) | (4,002,452) |
| உற்பத்தி செலவினம் | **764,442** | **3,305,379** |
| **கழி : வெளியீடு மற்றும் மற்றைய வருமானம்** | | |
| வெளியீட்டு ஆலோசனை செலவீனம் | - | 1,248 |
| **கூட்டு : செலவுனம்** | | |
| சம்பளங்களும் படிகளும் | 1,691,877 | 1,494,976 |
| ஊழியர் மேலதிக நேரம் | 104,583 | 30,020 |
| ஊழியர் சேமலாப நிதி | 218,798 | 188,255 |
| ஊழியர் நம்பிக்கை நிதி | 54,699 | 47,064 |
| ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் | 24,000 | 22,750 |
| பங்குபற்றலுக்கான விற்பனைக்காக செலுத்தல் | 47,927 | 246,671 |
| எழுத்தாளர் செலவினம் | 35,708 | - |
| வேறு செலவினம் | 65,500 | - |
| **மொத்த உற்பத்தி செலவினம்** | **3,007,535** | **5,336,363** |
| **வருமானத்தை விட செலவு துண்டுவிழல்** | **(2,597,349)** | **(2,464,116)** |

அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

**வியாபார கணக்கு (ஏனைய விற்பனை பிரிவு) 2020.01.01 தொடக்கம் 2020.12.31 வரை**

| | வருடமுடிவு **31/12/2020** **(ரூ.)** | வருடமுடிவு **31/12/2019** **(ரூ.)** |
|---|---|---|
| **வருமானம்** | **18,709,825** | **18,675,619** |
| கழி : விற்பனை செலிவினம் | | |
| ஆரம்ப தொகை | 7,737,536 | 9,648,501 |
| கொள்வனவு செய்தல் | 17,707,765 | 12,849,717 |
| கூட்டு : தொகை துண்டுவிழல் | (10,218) | (34,066) |
| அதிகரித்தல் | 6,891 | 37,600 |
| குறைத்தல் : கடைசி தொகை | (10,603,979) | (7,737,536) |
| **விற்பனை செலவு** | **14,837,994** | **14,764,217** |
| **இலாப விகிதாசாரம்** | **3,871,831** | **3,911,403** |

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

எனது இல:- சீஏஎம்/டீ/எஸ்பீசீ/01/20/178 2021 நவம்பர் 12

தலைவர்
அரச அச்சகக் கூட்டுத்தாபனம்

அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரச அச்சகக் கூட்டுத்தாபனத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை என்ற பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு நியமத்தின் இலக்கம் 16 இன் 51 ஆவது பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் எஞ்சிய மதிப்பு (Residual Value) மற்றும் அதன் ஆக்கபூர்வமான ஆயுள்காலம் குறைந்தபட்சம் அந்தந்த நிதியாண்டின் இறுதியிலே மீளாய்வுக்குட்படுத்தப்பட வேண்டியதுடன் எதிர்பார்க்கப்பட்ட மதிப்பு முன்பு மதிப்பிடப்பட்ட மதிப்புடன் வேறுபடுமாயின் அந்த வேறுபாட்டை கணக்கீட்டின் மதிப்பீட்டின் வேறுபாடொன்றாக இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் பிரகாரம் கணக்கிடப்பட வேண்டிய போதிலும், ஆரம்பத்திலேயே பெறுமானத்தேய்வு செய்யப்பட்டுள்ளது இருப்பினும் இன்னும் பாவனைக்குட்படுத்தப்படுகின்ற கூட்டுமொத்தம் ரூபா 4,186,450 பெறுமதியான 270 அலகுகளான கணனி உதிரிப்பாகங்களின் ஆக்கபூர்வமான ஆயுட்காலத்தை மீளாய்விற்குட்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) 2021 சனவரி மாத 21 ஆந் திகதிய பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக அந்த வருடத்தின் இலாபத்தின் அடிப்படையில் கொடுப்பனவிற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள கூட்டுமொத்தம் ரூபா 48,528,036 ஆன ஊக்குவிப்பு கொடுப்பனவிற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் இலாபம் அந்த அளவில் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்காக குறித்த ரூபா 12,703,425 ஆன பணிக்கொடைக்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் இலாபம் அந்த அளவில் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிலே திசெம்பர் 31 ஆந் திகதியில் அச்சு நடவடிக்கைகள் நிறைவடையாமல் பூர்த்தியாக்கப்படாத நிலையில் இருந்த கூட்டு மொத்த பெறுமதி ரூபா 24,356,981 ஆன 16 கட்டளைகள் மீளாய்வாண்டிலே விற்பனை வருமானமொன்றாக கருதப்பட்டதனால் விற்பனை மற்றும் கடன்பட்டோர் பெறுமதி அந்த அளவில் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிலே கொள்வனவு செய்து பாவனைக்குட்படுத்திய ரூபா 685,422 பெறுமதியான வியாபார வளத் திட்டமிடல் (ERP) கட்டமைப்பு பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப்படாததனால் மீளாய்வாண்டிலே பெறுமானத்தேய்வுச் செலவு ரூபா 17,840 வால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) அச்சகக் கூட்டுத்தாபன பேரேட்டிலே தனிப்பட்ட கணக்குகளின் மீதிகளின் பிரகாரம் மீளாய்வாண்டிலே திசெம்பர் 31 ஆந் திகதியில் 14 நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 5,010,272 ஆக காணப்பட்ட போதும், அந்த நிறுவனத்தினால் கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்பட்ட மீதி ரூபா 2,725,010 ஆகும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகள் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.3 கூட்டுத்தாபனத்தின் 2020 இன் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்**

இக்கணக்காய்வு அறிக்கையின் திகதிக்குப் பின்னர் எனக்கு அனுப்பப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற கூட்டுத்தாபனத்தின் 2020 இன் வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆனால் நிதிக்கூற்றுக்களுடன் அது சம்பந்தமாக எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்களாகக் கருதப்படும். இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை என்பதுடன் அது தொடர்பில் எவ்வித உறுதியான முடிவுகளையும் நான் வெளிப்படுத்தவில்லை.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கணக்காய்வின் போது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெறமுடியுமான போது ஏனைய தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு விதத்தில் பெறப்பட்ட எனது அறிவின் பிரகாரம் பொருண்மையாக பொருந்தவில்லையா என்பதைக் கருத்தில் கொள்தல் எனது பொறுப்பாகும்.

கூட்டுத்தாபனத்தின் 2020 இன் வருடாந்த அறிக்கையை வாசிக்கும் போது அதில் பொருண்மையான தவறுகள் இருப்பதாக நான் முடிவு செய்தால் அதைத் திருத்துவதற்காக ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களுக்கு அவ்விடயம் வெளிப்படுத்தப்படும். மேலும் திருத்தப்படாத தவறுகள் காணப்பட்டால் அவை அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தா்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடா்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடா்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவக உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடா்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக கூட்டுத்தாபனத்தின் தொடா்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடா்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கின்ற தரப்பினர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**2. ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடு தொடர்பான அறிக்கை**

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் விளக்கமளித்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனைகளிலிருந்து தோன்றுகின்ற வகையில் முறையான நிதி அறிக்கையை கூட்டுத்தாபனம் பேணியுள்ளது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஐ)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுக்கு நேரொத்ததாகும்.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஐ)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட இந்த அறிக்கையில் தரப்பட்டுள்ள ஏனைய சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் மற்றும் பொருண்மையான விடயங்களின மட்டுப்பாடுகளுக்குள் பின்வரும் வெளிப்படுத்தல்களைச் செய்யும் அளவுக்கு எதுவும் எனது கவனத்திற்கு உள்ளாகியிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து ஏதாவது தொடர்புபட்ட எழுத்துமூல சட்டங்களுக்கு அல்லது கூட்டுத்தாபனத்தின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணக்கமற்ற வகையில் செயற்பட்டுள்ளது என.

| | சட்டங்கள், விதிகள் / கட்டளைக்கான தொடர்பு | அவதானிப்பு |
|---|---|---|
| (அ) | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.6.1(ii) ஆம் பந்தி | விபரக்குறிப்புக்கள் இயற்கையாக உருவாகுவ தென்பதுடன் ஒரே மட்டத்திலான போட்டித் தன்மையுடன் மேம்படுத்த முடியுமாதென்பதை சான்றுறு திப்படுத்துவதற்கு விபரக்கு குறிப்புக்கள் மீளாய்விற்குட்படுத்தல் இடம்பெற வேண்டியதுடன் கிரயம் ரூபா 113,600,114 ஆன "லொம்பார்ட் 30" வகையான இயந்திரத்தை கொள்வனவு செய்யும் போது அவ்வாறு விபரக் குறிப்புக்கள் பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2020 திசெம்பர் 18 ஆந் திகதிய PED 03/2020 ஆம் இலக்க அரச வியாபார திணைக்களத்தின் சுற்றுநிருபம் | ஊக்குவிப்பு கொடுப்பனவு செய்யப்பட வேண்டியது 2019 ஆம் வருடத்தின் கணக்காய்வு நிதிக்கூற்றை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டியதுடன் 2020 ஆம் ஆண்டின் வரைபின் நிதிக்கூற்றை அடிப்படையாகக் கொண்டு 565 ஊழியர்களுக்கு இரண்டு சந்தர்ப்பங்களில் ஊக்குவிப்பு கொடுப்பனவாக ரூபா 48,528,036 செலுத்துவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. |

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணக்கமற்ற வகையில் செயற்பட்டிருந்தது என.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வளங்களை சிக்கனமாகவும் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் காலப்பகுதிக்குள் உரிய சட்டவிதிகளுக்கு இணங்க பெறுகைகள் மேற்கொண்டு பயன்படுத்தியிருக்கவில்லை என.

**2.3 வேறு விடயங்கள்**

(அ) லொத்தர் தாமதமாகி அச்சிட்டு கையளிக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிலே தேசிய லொத்தர் சபைக்கு செலுத்தப்பட்ட தொகையில் கூட்டுமொத்தம் ரூபா 11,205,760 தாமதக் கட்டணமாக குறைக்கப்பட்டிருந்ததுடன் அந்த பெறுமதி மீளாய்வாண்டிலே லொத்தர் வருமானமான ரூபா 266,593,026 உடன் இணைக்கும் போது நூற்றுக்கு 04 சதவீதமாகும்.

(ஆ) 2021 பாடசாலை கல்வியாண்டிற்காக தேவையான பாடசாலை பாடசாலை புத்தகங்கள் 01 நாள் தொடக்கம் 49 நாட்கள் வரையான காலத்திற்குள் தாமதமின்றிஅ ச்சிட்டு கையளிக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிலே பாடப்புத்தகங்கள் அச்சிடல் வருமானத்தில் கூட்டுமொத்தம் ரூபா 14,918,809 வை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் தாமதக் கட்டணமாக குறைக்கப்பட்டிருந்தது.

(இ) கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட மட்டத்திலான 7 பதவிகளில் 5 பதவிகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் வெற்றிடமாக காணப்பட்டது. அந்த வெற்றிடமாக இருந்த பதவிகளில் 3 பதவிகள் 12 நாட்களிலிருந்து 26 மாதங்களான காலப்பகுதிகளாக வெற்றிடமாகக் காணப்பட்டது. அவ்வாறே அச்சு நடவடிக்கைகளுக்காக நேரடியாக தாக்கம் செலுத்துகின்ற மத்திய மட்டத்திலான 04 முகாமையாளர்கள், கனிஷ்ட மட்டத்திலான 11 முகாமையாளர்கள், 14 உதவி உத்தியோகத்தர்கள் மற்றும் 86 முகாமைத்துவ உதவி (தொழில்நுட்ப) உத்தியோகத்தர்கள் என்பதாக 115 உத்தியோகத்தர்களின் பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டது. அந்த வெற்றிட பதவிகளின் அளவு அந்தப் பதவி தொகுதியின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் நூற்றுக்கு 44 ஆகும். அவ்வாறே ஆரம்ப மட்டத்தில் பயிற்றப்படாத கணக்கில் பதவியணியினரில் 82 பேர் மீளாய்வாண்டிலே திசெம்பர் 31 ஆந் திகதியில் மேலதிகமாக காணப்பட்டது.

**டபிள்யூ. பீ. சீ. விக்கிரமரத்ன**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# 2020

## அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

## நிதி கூற்றுக்கள் பற்றிய கருத்துரை

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

(அ) 2022 ஆம் ஆண்டு முதல் நிலையான சொத்துக்களை உறுதிப்படுத்தும் சந்தர்ப்பங்களிலேயும் சொத்துக்களின் ஆக்கபூர்வமான ஆயுட்காலத்தை மதிப்பிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் 2023 ஆம் ஆண்டிலே கூட்டுத்தாபனத்திடம் உள்ள அனைத்து நிலையான சொத்துக்களையும் மீண்டும் மீள் மதிப்பிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) 2021.01.21 ஆந் திகதிய பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் வரவு மற்றும் செயலாற்றலை அடிப்படையாக வைத்து 2021 ஆம் அண்டின் ஊழியர்களை ஊக்குவிக்கும் முக்கிய நோக்கமாகக் கொண்டு மிகை ஊதியம்/ஊக்குவிப்பு கொடுப்பனவை செலுத்துவதற்காக பணிப்பாளர் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்தக் கொடுப்பனவு முன்னைய வருடத்தின் இலாபமீட்டலை அடிப்படையாகக் கொண்டு எதிர்வருகின்ற அடுத்த வருடத்திற்கு செலுத்துவதற்காக பணிப்பாளர் சபையின் அனுமதி கிடைக்கப் பெற்றிருந்தது.

அவ்வாறே 2019 ஆம் ஆண்டில் இலாபம் ஈட்டப்படவில்லையென்பதுடன் கூட்டுத்தாபனத்தினுள் கனணப்பட்ட திரவத்தன்மை பிரச்சினைகள் காரணமாக 2020 ஆம் ஆண்டிற்குரிய ஊக்குவிப்பு கொடுப்பனவை செலுத்தாமலிருப்பதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்த போதிலும் ஊழியர் சங்கம் மற்றும் ஊழியர்களின் வலுவான கோரிக்கைகள் மற்றும் எதிர்ப்பின் அடிப்படையில் மற்றும் 2021 ஆம் அண்டின் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை தொடர்ந்து நடாத்திச் செல்லும் நோக்கத்தில் 2020 ஆம் அண்டிற்காக இறுதிக் கணக்குகள் தயாரித்ததன் பின்னர் இலாபமொன்று காணப்படுமாயின் ஊழியர்களை ஊக்குவிக்கும் கொடுப்பனவாக ஒரு தொகைப் பணத்தை இரண்டு கட்டங்களில் செலுத்துவதற்கு முன்மொழியப்பட்டது. (அவ்வாறான தீர்மானத்திற்கு காரணம் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையில் ஊழியர்களின் உற்பத்தி நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்காக ஆகும்.)

அவ்வாறே 2021 ஆம் ஆண்டிலே செலுத்தப்பட்ட இந்த ஊழியர் கொடுப்பனவின் கணக்கிடுதலுக்காக அடிப்படையாக்கப்பட்டதும் 2021 இன் சனவரி ஊழியர் சம்பளத்திலாகும். இதற்கு முன்னைய வருடங்களிலேயும் கூட்டுத்தாபனத்திற்குள் செலுத்தப்பட்ட ஊக்குவிப்பு கொடுப்பனவு கணக்கிடப்பட்டிருந்ததும் உரிய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு வருடத்திற்குள்ளேயாகும். அதன் அடிப்படையில் அது 2021 ஆம் ஆண்டு கணக்கீட்டு வருடத்தின் செலவொன்றாக கணக்கிடப்பட்டிருந்தது.

இருப்பினும், பணிப்பாளர் சபையின் தீர்மானத்தை சரியான முறையில் தொடர்பாடலுக்கு உட்படுத்தாமை மற்றும் போதுமான வெளிப்படுத்தல்கள் இறுதிக் கணக்குக் கூற்றினுள் இடம்பெற்றிருக்காமை ஆகிய விடயங்களை கருத்திற் கொண்டு அதன் கணக்காய்வு அடிப்படையின் பிரகாரம் திருத்தங்கள் செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டிற்கு சீராக்கம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) முன்னைய வருடங்களிலே கணக்காய்வு அறிக்கைகளின் ஊடாக தெரியப்படுத்தியதன் பிரகாரம் 2020.12.31 இன் இறுதி வருடத்திற்காக (LKAS 19) இன் படி கணக்கீட்டு நியமம் இலக்கம் 19 இன் பிரகாரம் பணிக்கொடை (Actuarial Value) முறைமையை அடிப்படையாகக் கொண்டு இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட வெளிவாரி

கணக்காய்வு நிறுவனமொன்றின் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட மென்பொருளொன்றை பாவனக்குட்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அந்த பதிவேட்டை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (LKAS 19) இன் படி (Net benefit Liability) தேறிய பெறுமதி கணக்கிடப்பட்டுள்ளதுடன் இது 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றில் (5.1) வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மீளாய்வாண்டு வரை ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கத்தின் அளவு போதுமானதாக இருந்ததால் 2020 ஆம் ஆண்டிற்காக இலாபத்தில் இருந்து ஒதுக்கமொன்று இடம்பெற்றிருக்கவில்லை. இதற்காகவுள்ள கூடுதலான ஒதுக்கங்கள் கணக்கிடப்படுதல் கைத்தவறவிடப்பட்டுள்ளதுடன் அதன் பெறுமதி ரூபா 250,309.68 தொகை 2020 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளுக்காக சீராக்கப்படும்.

(ஈ) கொடுக்கல் வாங்கல் தாரர்களின் வேண்டுகோளின் பிரகாரம் (அரச நிறுவனத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகள் அந்த வருடத்திலேயே செலவு செய்யப்பட வேண்டியதுடன்) அச்சு நடவடிக்கைகள் நிறைவடையாத போதிலும் அவர்களுக்காக இன்வொய்ஸ் பத்திர விநியோகம் மேற்கொள்ளப்படும்.

2020 வருடத்திலே முழுமையாக வேலை நிறைவு செய்யப்படாத முடிவடைந்த நிலையிலுள்ள ரூபா 2,070,650.39 அச்சுக்கட்டளைகள் கொடுக்கல் வாங்கல் தாரர்களின் வேண்டுகோளுக்கிணங்க ரூபா 22,214,600.17 தொகை 2020 வருடத்திற்குரிய இன்வொய்ஸ் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டு 2020 வருமானத்திற்கு சீர்செய்யப்பட்டுள்ளது. இது இதற்கு முன்னைய வருடங்களிலேயும் இடம்பெற்றுள்ள போதிலும் இது சரி செய்யப்பட வேண்டியுள்ளது. அதன் பிரகாரம் 2019 ஆம் அண்டிலே கொடுக்கல் வாங்கல்தாரர்களின் வேண்டுகோளின் பிரகாரம் முடிவடையாத நிலையிலுள்ள 2020 ஆம் ஆண்டிலே வேலை நிறைவு செய்யப்பட்ட அச்சுக் கட்டளைகளின் பெறுமதி ரூபா 892,197.04 ஆகும்.

அதன் பிரகாரம் 2020 இலாபத்திற்கு சேர்க்கப்பட்டுள்ள ரூபா 19,251,752.74 ஆன தேறிய விளைவை சரி செய்து 2021 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) வியாபார வளங்களை திட்டமிடும் (ERP) முறைமை மீளாய்வு கணக்கீட்டு வருடத்தின் போது ஆரம்பிக்கப்பட்டு அபிவிருத்தி கட்டத்தில் காணப்படுவதுடன் (ERP) முறைமைக்காக அப்போது ஒட்டுமொத்த தரவுகள் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. (அது பரிசோதனை மட்டத்தல் காணப்பட்டது) அது பாவனை மட்டத்திற்கு வந்ததன் பின்னர் கிரயம் கணக்கிடப்பட்டு பெறுமானத்தேய்வு மேற்கொள்ளுதல் இடம்பெறும். இந்த முறைமையை தாபிப்பற்கு கணக்கீட்டு வருடம் இறுதித் தினத்தில் முற்பணத் தொகையொன்று மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. தற்போது பாவனை மட்டத்திற்கு வந்து கொண்டிருக்கின்றது.

(ஊ) இது தொடர்பாக குறித்த நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மீதிகளுடன் பெற்றுத்தந்தால் மேலதிகமாக தேடிப்பார்த்து தகவல்களை சமர்ப்பிக்க முடியும் என்பதுடன் வேறு நிறுவனங்களினால் பெற்றுத்தரப்படுகின்ற தகவல்களில் உண்மைத்தன்மை தொடர்பாக பிரச்சினைகள் காணப்பட முடியும். ஒவ்வொரு நிறுவனத்தினாலும் மீதி உறுதிப்படுத்தலொன்றை சமர்ப்பித்தல் அவர்களின் பொறுப்பாகும்.

### 2.2.1 சட்ட ஒழுங்கு / முறைமைகளுடனான தொடர்பு

(அ) 2019 ஒக்தோபர் 17 ஆந் திகதி பெறுகைகள் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மேற்குறித்த பெறுகைகளுக்காக 2018.08.30 ஆந் திகதிய தொழில்நுட்ப அறிக்கையை அடிப்படையாக வைத்து தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதுடன் தொழில்நுட்பக் குழுவினால் விநியோகத்தர்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள Option 1 மற்றும் Option 2 தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. தற்போது கூட்டுத்தாபனத்திடம் காணப்படுவது Option 2 காட்டப்படும் இயந்திரமானதோடு Option 1 ஊடாக காட்டப்படும் இயந்திரத்தினால் அந்த இயந்திரத்திக்கு கீரப்படும் லொத்தர் (Seratch Unit) பொருத்தப்பட்டதன் பின்னர் விலை குறிப்பிடப்பட்டிருந்தது.

லொத்தர் சபைக்கு சுரண்டும் லொத்தர்களை கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக் கொடுக்காததன் காரணமாக அந்த சந்தர்ப்பத்திலே விலை அதிகம் என்பதனாலும் தொழில்நுட்பக் குழு அதை ஒதுக்கியிருந்தது. மேற்குறித்த கேள்வி மனுக்காக ஒரு மனுதாரர் மாத்திரம் கேள்வி மனுவை

சமர்ப்பித்திருந்ததுடன், கேள்வி மனு படிவத்தின் Section V Shedule of Requirement பகுதியில் மனுதாரரின் மறுமொழி "ஆம்" "இல்லை" என்பதாக தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதனால் மாற்றுவழியாக போட்டித்தன்மையுடனாகவும் மனுதாரர்களுடன் ஒப்பீட்டளவிலான பகுப்பாய்வொன்று இங்கு தேவையேற்பட்டிருக்கவில்லை. அதனால் குறித்த அட்டவனை தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பரிந்துரைக்காக முன்வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) 2020 திசெம்பர் 18 ஆந் திகதிய PED 03/2020 ஆம் இலக்க அரச வியாபாரத் திணைக்களத்தின் சுற்றுநிருபம்

வருட இறுதியிலே ஊழியர்களினால் தொழிற்சங்கத்தின் ஊடாக ஊக்குவிப்புக் கொடுப்பனவிற்காக முன்வைக்கப்பட்ட வேண்டுகோளின் காரணமாக மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்வதற்காக ஆரம்பக் கட்டமாக ஊழியர்களின் ஊக்குவிக்கும் புதிய ருடத்தின் பாடசாலைப் புத்தகங்களை உரிய தினத்தில் அச்சிட்டு முடிப்பதற்காக இறுதி கணக்குகளை தயாரிப்பதற்கு முன்னர் வரைபின் இறுதிக் கணக்குகளை அடிப்படையாகக் கொண்டு பணிப்பாளர் சபையினால் இரண்டு கட்டங்களில் ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு / மிகை கொடுபபனவு வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

**2.3** (அ) ஒட்டுமொத்தமாக 2020 ஆம் அண்டில் உலகளாவிய தொற்றாக கொரோனா நோயின் வியாபித்திருந்ததன் காரணமாக குறிப்பிட்டளவு காலம் நிறுவனம் மூடப்படுவதற்கு காரணமாக இருந்ததுடன் அத்தோடு அவ்வாண்டின் மே, யூன், யூலை ஆகிய மாதங்களில் நிறுவனம் திறக்கப்பட்டதன் பின்னர் குறைந்தளவு ஊழியர்களை ஈடுபடுத்தி உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்ததுடன், இந்த லொத்தர் பத்திரங்களை அச்சிடுவதற்காகவும் குறைந்த ஊழியர் எண்ணிக்கையை சுகாதாரப் பாதுகாப்பு ஆலோசனையின் பிரகாரம் கோவைக்கு உள்ளீர்க்கப்பட்டிருந்ததுடன் அதனால் நாளாந்த லொத்தர் பத்திர அச்சிடுதலை திட்டமிட்டதன் பிரகாரம் நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாத நிலைமை ஒன்று உருவானதால் இவ்வாறு லொத்தரை அச்சிட்டு லொத்தர் சபைக்கு பெற்றுக் கொடுப்பதில் ஏற்படுகின்ற தாமதத்தை காரணப்படுத்தி இவ்வாறு தண்டப்பணமொன்று அறவிடப்பட்டுள்ளது.

(ஆ) இந்த காலப்பகுதியில் உலகளாவிய தொற்றாக பரவிச்சென்ற கொரோனா நோயின் காரணமாக அனைத்து நிறுவனங்களும் மூடப்படுவதற்கு காரணமானதால் அச்சிடுவதற்கு அவசியமான பிரதான மூலப்பொருளான வெள்ளை அச்சுக் கடதாசிகளை இறக்குமதி செய்வதில் பிரச்சினையான நிலைமையொன்று உருவானதுமன், இந்த கடதாசியை பிரதானமாக உற்பத்தி செய்கின்ற சீன மற்றும் இந்தியா போன்ற நாடுகள் முழுமையாக மூடப்பட்டிருந்தமை இதற்கு பிரதானமானதாக தாக்கம் செலுத்தியிருந்தமை கூறிக்கொள்கின்றேன்.

மேலும், கல்வி வெளியீட்டுத் திணைக்களம் மற்றும் எங்களுடைய நிறுவனத்திற்குமிடையில் ஒப்பந்தத்திலே குறிப்பிடப்பட்டுள்ளதன் படி தாமதமாகி விநியோகிக்கப்படுகின்ற பாடப்புத்தகங்களுக்காக 5% அல்லாமல் 0.5 ஆன தாமத தண்டப்பணமொன்று அறவிடப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டிலே தாமதமான பாடப்புத்தகங்களுக்கிடையில் மதல் கட்டளைகளுக்கு உரிய 57 பாடப்புத்தகங்களில் 17 பாடப் புத்தகங்களுக்கு மாத்திரம் தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளதுடன் அதன் பெறுமதி ரூபா 9,879,137.04 ஆகும். மேலும் இரண்டாவது கட்டளைக்கு உரிய அனைத்து பாடப்புத்தகங்களும் குறித்த தினத்தில் வழங்கி நிறைவு செய்ததன் மூலம் எந்த ஒரு பாடப்புத்தகத்திற்கும் குறைந்த தொகையொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை.

மேலும் பாடப்புத்தக அச்சிற்காக பெற்றுக் கொடுக்கப்பட்டதன் விளைவாக புத்தகத்தின் உட்பக்கம் அச்சிடப்பட்டு முடிவுறுத்தப்பட்ட போதிலும் அந்தப் புத்தகங்களுக்கு உரிய பார்கோட் இலக்க அச்சிடலுக்கு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் எங்களுக்கு பெற்றுத்தரும் போது 14 நாட்கள் தாமதமாகியிருந்தது. இதனால் பாடப்புத்தகம் விநியோகப் பிரிவில் முடிவுறுத்தும் போது பிரச்சினைக்குரிய நிலைமை உருவானது.

அவ்வாறே இவ்வருடம் எங்களினால் அச்சிற்காக பயன்படுத்தப்படும் வெள்ளை அச்சுக் கடதாசிகளில் எவ்வித அச்சுக் கோளாறொன்றும் காணப்படவில்லையென்பதுடன் சரியான விபரக்குறிப்புக்களுக்கு அனுகூலமாக கடதாசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதை தெரிவித்துக் கொள்வதுடன் 20 வகையான பாடப்புத்தகங்களுக்கான மதிப்பிடப்பட்டிருந்த பக்க அளவுகளை விட குறைவாக (இந்த வருட பாடப்புத்தக அச்சின் போது கல்வி அமைச்சர், கல்வி வெளியீட்டு ஆணையாளரினால் பாடப்புத்தகத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய விடய்ங்களை அனுப்பாததனால் பக்கங்களின் எண்ணிக்கை குறைந்திருந்தது). அச்சிடப்பட்டதனால் பக்க எண்ணிக்கைளின் வேறுபாட்டின் அடிப்படையில் பாடப்புத்தகங்களின் மதிப்பிடப்பட்ட பெறுமதி வேறுபட்டிருந்தது. இவ்வாறு பக்கங்களின் குறைவினால் ரூபா 5,039,671.92 பணம் குறைத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

அதனால் 2022 வருடத்திற்கு உரிய எங்களினால், அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படுகின்ற பாடப்புத்தகங்களின் தண்டப்பணமாக ரூபா 9,879,137.04 அறவிடப்பட்டிருந்ததுடன் பக்கங்கள் குறைவடைந்ததன் அடிப்படையில் ரூபா 5,039,671.92 தொகையொன்றை குறைத்துக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

(இ) 2020 ஆம் ஆண்டின் வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்காக செய்திப் பத்திரிகைகளில் வெற்றிடங்கள் தொடர்பாக பகிரப்பட்டு விண்ணப்பங்களை கோருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் நிலவிய கொவிட் தொற்றின் காரணமாக ஆட்சேர்ப்பை மேற்கொள்ள முடியாமல் போனது. மேலும், 2021 ஆம் ஆண்டிற்குள்ளேயும் குறித்த ஆட்சேர்ப்பு இடம்பெற்றதுடன் நாட்டிற்கு நிலவிய கொவிட் தொற்றுக்கு மத்தியில் நேர்முகப் பரீட்சையை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு நேர்ந்ததுடன் மீண்டும் நாடு திறக்கப்பட்டதன் பின்னர் அந்த நடவடிக்கைகளை துரிதமாக நிறைவேற்றிக் கொள்வதற்கு திட்டமிடப்பட்ட போதும், அரச நிறுவனங்களின் செலவுகளை வரையறுக:கும் சுற்றுநிருபத்தின் பிரகாரம் தற்போது அந்த நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அத்தியாவசியமான ஆட்சேர்ப்புக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் ஊடாக அமைச்சரவை அங்கீகாரத்துடன் குறித்த வெற்றிடங்கள் பூரணப்படுத்துவதற்காக கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. உரிய அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

# ANNUAL REPORT 2020

State Printing Corporation